விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 137 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 22 திங்கட்கிழமை (05.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal
றோயல்
சுத்தமான தேன்
ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.

Marketed By:- (C-2889)
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 2222 567

### வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின்
## பொதுச் செயலாளருடன் அநுர கலந்துரையாடல்



(ஹனோய்)

வியட்நாமுக்கு அரச முறை விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, நேற்று ஞாயிற்

15ஆம் பக்கம் பார்க்க

### பகிடிவதையால் பல்கலை
## மாணவன் மரணம்
### சிஐடியால் நால்வர் கைது

(கொழும்பு)

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப விஞ்ஞான பீடத்தின் இரண்டாம் வருட மாணவன் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து நான்கு மாணவர்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றப்புலனாய்வுத் துறை 02ஆம் பக்கம் பார்க்க

### இலங்கை – பாகிஸ்தான் இடையேயான
## பாதுகாப்பு ஒத்துழைப்பு கலந்துரையாடல் நிறைவு



(கொழும்பு)

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான 5 ஆவது இருதரப்பு பாதுகாப்பு ஒத்துழைப்பு கலந்துரை

15ஆம் பக்கம் பார்க்க

# 7 வருடங்களின் பின்னர் நாளை உள்ளூராட்சி சபைத் தேர்தல்

- பாதுகாப்பில் 65 ஆயிரம் பொலிஸார்
- கண்காணிப்பில் 3 ஆயிரம் பேர் களத்தில்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் சுமார் ஏழு வருடங்களுக்குப் பின்னர் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. இந்நிலையில் தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளூராட்சித் தேர்தல்
## பாடசாலைகளுக்கு இரு நாள் விடுமுறை

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தல் நாளை 6ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியில் இடம்பெறவுள்ள நிலையில், இன்று திங்கட்கிழமை மற்றும் நாளை செவ்வாய்க்கிழமை ஆகிய இரு தினங்களும் பாடசாலை விடுமுறை தினங்களாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் 15ஆம் பக்கம் பார்க்க

## பிரபாகரனின் படத்துடன் பிரசார துண்டுப்பிரசுரம்
### வேட்பாளர் மீது சட்டநடவடிக்கை

(முள்ளியவளை)

தலைவர் பிரபாகரனின் புகைப்படத்தை தேர்தல் பிரசாரத் துண்டுப்பிரசுரத்தில் பயன்படுத்தி வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்ட முல்லைத்தீவு முள்ளியவளைப் பகுதியைச் சேர்ந்த வேட்பாளருக்கு எதிராகப் பொலிஸார் சட்டநடவடிக்கை எடுத்துள்ளனர்.

குறித்த வேட்பாளர் நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு புதிய சட்டம் அரங்கேறும்
### ஜனாதிபதி அநுர உறுதிபடத் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டம் விரைவில் நீக்கப்பட்டு மாற்றீடாக புதிய சட்டம் கொண்டு வரப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற பிரத்தியேக நேர்காணல் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

"பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக எல்லா வழிகளிலும்

15ஆம் பக்கம் பார்க்க

## காங்கேசன்துறை ஜனாதிபதி மாளிகை
### யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்படமாட்டாது
### அமைச்சர் கருணாதிலக தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ்ப்பாணம் காங்கேசன்துறையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு வழங்கப்படமாட்டாது. அது சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கே பயன்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி கட்டுமானம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்

15ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் அமைச்சர்கள் அறுவர் விரைவில் கைது
### கொழும்பு ஊடகம் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

விரைவில் முன்னாள் அமைச்சர்கள் ஆறு பேர் கைதாக வாய்ப்புள்ளதாக கொழும்பு ஊடகம்ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் அமைச்சர்கள் 6 பேர் மீதான ஊழல் மற்றும் மோசடி குற்றச்சாட்டுக்கள்

15ஆம் பக்கம் பார்க்க

### பிரதித் தேர்தல் ஆணையராக சசீலன் பதவி உயர்வு



02ஆம் பக்கம் பார்க்க

## மாகாண சபைத் தேர்தலை நடத்த தயாராகவுள்ளோம்
### மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் அச்சுதன்

(கொழும்பு)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு தயாராகவுள்ளது என, மேலதிக தேர்தல் ஆணையாளர் சிவசுப்ரமணியம் அச்சுதன் தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகத்துக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் இது குறித்து

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணற்கொள்ளையர்களால்
# ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல் சாவகச்சேரி பொலிஸில் முறையீடு

(சாவகச்சேரி)

சுயாதீன ஊடகவியலாளரும் தேர்தல் கண்காணிப்பாளருமான சாவகச்சேரியைச் சேர்ந்த தவராசா சுபேசனுக்கு தொடர்ச்சியாக மணற்கொள்ளையர்களால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வந்த நிலையில் அது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் மேற்படி மணற்கொள்ளைக் குழுவினர் ஊடகவியலாளருடைய தந்தை யாருக்கு விபத்தினை ஏற்படுத்தி விட்டு அவ்விடத்தை விட்டு அகன்ற பின்னர் இரவு வேளையில் தொலைபேசியில் ஊடகவியலாளருக்கு அழைப்பை ஏற்படுத்தி பணம் கேட்டு மிரட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தாம் விபத்து ஏற்படுத்திய சம்பவத்தை வெளியே தெரிவித்தாலோ அன்றி பணம் தராவிட்டாலோ மீண்டும் இவ்வாறான விபத்துக்களை ஏற்படுத்துவோம் எனவும் கூறி மிரட்டியுள்ளதாகவும் அதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை ஊடகவியலாளர் சுபேசன் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளையில் தொலைபேசி அழைப்பெடுத்து உயிர் அச்சுறுத்தல் விடுத்ததாகவும் மேற்படி சம்பவம் தொடர்பாக ஊடகவியலாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ந-7,4,30)

## 7 வருட...

இதற்கமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்குப்பெட்டிகள், வாக்குப்பெட்டிகள் அனுப்பும் நிலையங்களில் இருந்து வாக்களிப்பு நிலையங்களுக்குக் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகள் இன்று காலை ஆரம்பிக்கப்படவுள்ளன.

அந்த வகையில் 339 உள்ளூராட்சி சபைகளுக்காக 3 ஆயிரத்து 759 வாக்களிப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது மாற்றுத்திறனாளிகள் வாக்களிக்க விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதன் பிரகாரம் ஓரளவுக்கு கண்பார்வை மங்கிய அல்லது கண்பார்வையற்ற நபர்கள் தங்கள் வாக்குகளை சுயமாக செலுத்தும் வகையில் வாக்குச்சீட்டின் மீது தொட்டுணரக்கூடிய ஸ்டென்சில் சட்டகம் ஒன்றைப் பயன்படுத்தும் வசதி அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் சக்கர நாற்காலி அல்லது ஊன்றுகோல் போன்ற கருவிகளின் துணையுடன் வரும் நபர்கள் வாக்களிப்பு நிலையத்துக்குள் இலகுவாகப் பிரவேசிக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சக்கர நாற்காலியில் வருகை தரும் நபர்கள் மற்றும் உயரம் குறைந்தவர்கள் இலகுவாக வாக்களிக்கும் வகையில் வாக்குப் பெட்டியை குறைவான உயரத்தில் வைக்குமாறும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பணிகளுக்காக சுமார் 65 ஆயிரம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

3,126 நடமாடும் ரோந்துப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் தேவை ஏற்படின் இராணுவ உதவி நாடப்படும் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக்க மனதுங்க தெரிவித்தார்.

இதற்கிடையில், உள்ளூராட்சித் தேர்தலுக்கான அதிகார பூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்கவில்லை என்றால், தேர்தல் நாளிலும் கூட தபால் நிலையங்கள் மூலம் அவற்றைப் பெறலாம் என தேர்தல் ஆணையத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்னாயக்க தெரிவித்தார்.

இதேவேளை இத் தேர்தலில் மூவாயிரம் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்தார். (ந-4,7)

## பிரதித்...

யாழ்ப்பாண மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளராக இ.சசீலன் நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளராக அவர் இதுவரை காலமும் செயற்பட்டுவந்த நிலையில், பிரதித் தேர்தல்கள் ஆணையாளராக அவர் பதவி உயர்த்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மாணவன்...

மேற்கொண்ட விசாரணையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மூன்றாம் வருட மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,4)

## தேர்தல் கடமைகளில் ஈடுபட்டிருந்த
# பொலிஸ் உத்தியோகத்தர் மாரடைப்பால் உயிரிழப்பு

(கரணவாய்)

நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை தேர்தல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் உல்பத்தகம, கல்கிரியாகம, அநுராதபுரத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான முதியன்சலாகே அஜித்குமார ஜெயசுந்தர என்ற பொலிஸ் உத்தியோகத்தரேயாவர்.

நேற்றுக் காலை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் தேர்தல் கடமையில் இருந்த பொழுது மயக்கம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போது அவர் மரணம் அடைந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் கரவெட்டி திடீர் மரண விசாரணை அதிகாரி வேலுப்பிள்ளை பாஸ்கரன் விசாரணை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு அறிவுறுத்தினார்.

பிரேத பரிசோதனையில் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் சம்பவித்துள்ளது என அறிக்கையிடப்பட்டுள்ளது. (ந-7,4,60)

## பருத்தித்துறைக் கடலில்
# இளம் குடும்பப்பெண் சடலமாக மீட்பு

(கரணவாய்)

பருத்தித்துறை மூர்க்கம் கடற்கரையில் இளங்குடும்பப் பெண் ஒருவரின் சடலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை(04) பிற்பகல் கரை ஒதுங்கி உள்ளது.

சக்தி கோவிலடி தும்பளை கிழக்கைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான தர்சன் சத்தியா (வயது-36)என்பவரது சடலமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளதாக இனங்காணப்பட்டுள்ளது.

கடற்கரையில் சடலம் காணப்படுவதாகப் பருத்தித்துறைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (ந-7,4,60)

## பதில் அமைச்சர்கள் நியமனம்

(கொழும்பு)


ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டுள்ளதால், நான்கு அமைச்சுகளுக்கு பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதியின் கீழ் உள்ள டிஜிட்டல் பொருளாதார அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஆகிய அமைச்சுகளுக்கும், அமைச்சர் விஜித ஹேரத்தின் கீழ் உள்ள வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சிற்கும் பதில் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சரான கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பதில் அமைச்சராகவும், டிஜிட்டல் பொருளாதாரப் பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன, டிஜிட்டல் பொருளாதார பதில் அமைச்சராகவும், பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர பாதுகாப்புப் பதில் அமைச்சராகவும், வெளிநாட்டலுவல்கள் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர, வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ந-4,7)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சங்கீத பாட ஆசிரியர் திருமதி ஜெ.விஜயசாந்தினி அவர்களின் அன்புக் கணவர்



சின்னத்தம்பி ஜெகதீஷ்வரன்

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவுகளுக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

தோற்றம் 1970.09.18 மறைவு 2025.05.02

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பளை.

(C-2897)



## வீட்டுப் பணிப்பெண் தேவை

கோண்டாவில் மேற்கில் அமைந்துள்ள வீடு ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்யும் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு : 077 785 5330

(C-2896)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரமான தேர்தலுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்!

## தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்து

(கொழும்பு)

**சுதந்திரமான தேர்தல் இடம்பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு தேர்தல் ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் பிரசாரப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அத்துடன் ஒவ்வொரு கட்சி அல்லது சுயேட்சைக்குழுவும் உள்ளூராட்சி மன்ற மட்டத்திலோ, வாக்குச் சாவடிகள் மட்டத்திலோ திறந்துள்ள அலுவலகங்களிலோ 60 அடி கொண்ட பேனர் தவிர்த்து வேறு எந்த அலங்காரப் போஸ்டர்களும் காட்சிப்படுத்த முடியாது.

அதேபோன்று தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் பயணிக்கும் வாகனங்களில் போஸ்டர்களைக் காட்சிப்படுத்தவோ, எடுத்துச் செல்லவோ தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான கட்டுப்பாடுகளை மீறும் எந்தவொரு அபேட்சகர் அல்லது ஆதரவாளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது அரசியல்வாதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதிகள் மற்றும் வேட்பாளர்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்கும் காணொளிகள் மற்றும் புகைப்படங்களை பிற்பகல் 4.00 மணிக்கு பின்னர் ஊடகங்களில் வெளியிடுமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (நி-8)

## மீட்டியகொடவில் துப்பாக்கிச் சூடு

### ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மீட்டியகொட பொலிஸ் பிரிவின் பத்தேகம வீதியில் உள்ள மானம்பிட்ட பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிசூட்டில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தவர் மீட்டியாகொட, மானம்பிட்ட பகுதியைச் சேர்ந்த சரத் சமிந்த உதய குமார என்ற 47 வயதுடைய நபர் ஆவார்.

காயமடைந்த நபர் 52 வயதான மஹதுர நளின் வசந்த என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர் தற்போது பலபிட்டிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மீட்டியாகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-8)

## நல்லை ஆதீன குருமுதல்வரின் மறைவுக்கு நாமல் இரங்கல்



நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் மறைவுக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தனது அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், யாழ்ப்பாணம் நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமுதல்வர், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமி அவர்களின் மறைவு பற்றிய செய்தி அறிந்து மிகுந்த மன வேதனை அடைந்தேன்.

மண்ணுலக வாழ்வை நீத்த அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவர் இழப்பால் துயருறும் அனைத்துப் பக்தர்களுக்கும், மாணவர்கள் மற்றும் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும், மனமார்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஓம் சாந்தி..! எனத் தெரிவித்துள்ளார். (நி-8)

## வியட்நாம் விமான நிலையத்தில் ஜனாதிபதிக்கு அமோக வரவேற்பு



(கொழும்பு)

வியட்நாம் ஜனாதிபதி லுவோங் குவாங் இன் அழைப்பின் பேரில் வியட்நாமுக்கு அரச விஜயம் மேற்கொண்டு நேற்று நாட்டிலிருந்து புறப்பட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, நேற்று வியட்நாமின் நோய் பாய் சர்வதேச விமான நிலையத்தை சென்றடைந்தார்.

அங்கு, ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர், வியட்நாம் கம்யூனிஸக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் வெளியுறவுத் துறை பிரதி அமைச்சருமான நுயென் மான் குவோங் உள்ளிட்ட அரச பிரதிநிதிகளால் வரவேற்கப்பட்டனர். (நி-8)

## நியூசிலாந்து, போலந்து வெளிவிவகார அமைச்சர்கள்

# இலங்கை விஜயம்



(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொண்டு நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் வின்ஸ்டன் பீட்டர்ஸ் மற்றும் போலந்து வெளிவிவகார அமைச்சர் ராடோஸ்லாவ் சிகோர்ஸ்கி ஆகியோர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாக வெளி விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களின் விஜயம் எதிர்வரும் 25 மற்றும் 28 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உள்ளிட்ட அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களைச் சந்தித்து இருதரப்பு கலந்துரையாடல்களிலும் ஈடுபடவுள்ளனர். (நி-8)

## ஆஸ்துமா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தற்போது ஆஸ்துமா நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

உலகளவில் 100,000 பேரில் 3,340 பேருக்கு ஆஸ்துமா நோய் இருப்பதாக சுவாச நோய் வைத்திய நிபுணர் ஆஷா சமரநாயக்க தெரிவித்துள்ளார். உலகெங்கிலும் உள்ள இளைஞர்களிடையே ஆஸ்துமா பரவலாக இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 6 ஆம் திகதி உலக ஆஸ்துமா தினத்தை முன்னிட்டு அது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊடக சந்திப்பில் பங்கேற்று உரையாற்றிய போதே வைத்திய நிபுணர் இதனைக் குறிப்பிட்டார்.

'இன்ஹேலர்' சிகிச்சையானது பக்க விளைவுகள் இல்லாமல் ஆஸ்துமாவை மிகச் சிறப்பாக குணப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

இந்த நாட்டில் ஆஸ்துமா நோய் இருந்தாலும், அது கண்டறியப்படாத நோயாளிகள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர் எனத் தெரிவித்தார். (நி-8)

## பிரதமரை சந்தித்த ஜப்பான் அமைச்சர்

(கொழும்பு)

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் நகாதானி, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரியவை அலரி மாளிகையில் நேற்று சந்தித்தார்.

இதன்போது நீண்டகால இருதரப்பு நட்புறவு மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டது.

மேலும் ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு மற்றும்



பிராந்திய பாதுகாப்புத் துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதிலும் கவனம் செலுத்தப்பட்டது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிமையான லக்னோவை வளைத்துப் போட்டது பஞ்சாப்

## எட்டிவிடும் தூரத்தில் பிளே – ஓப் வாய்ப்பு





லக்னோவுக்கு எதிராக அசத்திய பஞ்சாப் அணி 37 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தர்மசாலாவில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் பஞ்சாப் - லக்னோ அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற லக்னோ அணித் தலைவர் ரிஷாப் பன்ட் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**பிரப்சிம்ரன் அபாரம்:**

பஞ்சாப் அணிக்கு பிரியான்ஷ் ஆர்யா (1) ஏமாற்றினார். மயங்க் யாதவ் வீசிய 2வது ஓவரில் "ஹட்ரிக்" சிக்சர் பறக்கவிட்ட ஜோஷ் இங்லிஸ் (30) கைகொடுத்தார். பொறுப்பாக ஆடிய பிரப்சிம்ரன், 30 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். அணித் தலைவர் ஷ்ரேயஸ், 45 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். நேஹல் வதேரா (16) நிலைக்கவில்லை. அவேஷ் கான் வீசிய 18வது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 26 ஓட்டங்கள் கிடைத்தது. பிரப்சிம்ரன் 91 ஓட்டங்களில் (7 சிக்சர், 6 பவுண்டரி) ஆட்டமிழந்தார்.

பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 236 ஓட்டங்கள் எடுத்தது. ஷஷாங்க் (33), ஸ்டாய்னிஸ் (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**படோனி அரைச்சதம்:**

கடின இலக்கை விரட்டிய லக்னோ அணிக்கு, பஞ்சாப் பவுலர்கள் தொல்லை கொடுத்தனர். அர்ஷ்தீப் சிங் "வேகத்தில்" மிட்சல் மார்ஷ் (0), மார்க்ரம் (13), நிக்கோலஸ் பூரன் (6) வெளியேறினர். அஸ்மதுல்லா உமர்ஜாய் பந்தில் கேப்டன் ரிஷாப் பன்ட் (18), டேவிட் மில்லர் (11) ஆட்டமிழந்தனர்.

லக்னோ அணி 73 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து திணறியது.

பின் இணைந்த ஆயுஷ் படோனி, அப்துல் சமத் ஜோடி ஆறுதல் தந்தது.

ஆறாவது விக்கெட்டுக்கு 81 ஓட்டங்கள் சேர்த்த போது சமத் (45) ஆட்டமிழந்தார்.

விஜய்குமார் வைஷாக் பந்தை சிக்சருக்கு அனுப்பிய படோனி, 32 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். சகால் "சுழலில்" படோனி (74) சிக்கினார்.

20 ஓவர்கள் நிறைவில் லக்னோ அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்கள் மட்டும் எடுத்து தோல்வியடைந்தது. அவேஷ் கான் (19), பிரின்ஸ் யாதவ் (1) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ந-4,7)

# ரசல் 'ராட்சச' ஆட்டம் கொல்கத்தா கொண்டாட்டம்

- பிளே – ஓப் வாய்ப்பைத் தக்க வைத்து உற்சாகம்
- ஒரு ஓவரில் 5 சிக்ஸர்களை பறக்கவிட்ட பராக்கின் ஆட்டம் வீணானது



கடைசி பந்துவரை பதற்றமான பிரீமியர் லீக் போட்டியில், கொல்கத்தா அணி ஒரு ஓட்டத்தால் "திரில்" வெற்றி பெற்றது. 25 பந்துகளில் 57 ஓட்டங்கள் விளாசிய ரசல், வெற்றிக்குக் கை கொடுத்தார். ராஜஸ்தான் அணியின் தலைவர் ரியான் பராக் (95 ஓட்டங்கள்) ஆட்டம் வீணானது.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த பிரீமியர் லீக் போட்டியில் (பகலிரவு) ராஜஸ்தான், கொல்கத்தா அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா அணித் தலைவர் ரகானே துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

**22 பந்துகளில் அரைச்சதம்:**

கொல்கத்தா அணிக்கு நரைன் (11), குர்பாஸ் (35), ரகானே (30) பெரிதாக சோபிக்கவில்லை. 13 ஓவரில் 111/3 ஓட்டங்கள் தான் எடுத்திருந்தது. பின் ரசல், ரகுவன்ஷி அசத்தினர். தனது முதல் 9 பந்துகளில், ரசல் 2 ஓட்டங்கள் மட்டுமே எடுத்திருந்தார். மத்வால் ஓவரில் (16வது) 15 ஒட்டங்கள் (4, 6, 4) விளாசி, அதிரடியை ஆரம்பித்தார். தீக்ஷன ஓவரில் (18) "ஹட்ரிக்" சிக்சர் பறக்கவிட்டார் ரகுவன்ஷி, 44 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மணிக்கு 148 கி.மீ., வேகத்தில் ஆர்ச்சர் வீசிய பந்தை சிக்சருக்கு அனுப்பிய ரசல், 22 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். இது, இத்தொடரில் இவரது முதல் அரைச்சதம். சிறந்த "பினிஷரான" ரிங்கு சிங் 6 பந்துகளில் 19 ஓட்டங்கள் விளாசினார். கடைசி 5.ஓவர்களில் 85 ஓட்டங்கள் எடுக்கப்பட்டன.

20 ஓவர்கள் நிறைவில் கொல்கத்தா 206/4 ஓட்டங்கள் குவித்தது. ரசல் (57, 4X4, 6X6), ரிங்கு சிங் (19, 1X4, 2X6) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**நழுவிய பராக் சதம்:**

கடின இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி. வைபவ் அரோரா வீசிய முதல் ஓவரில் இளம் வைபவ் சூர்யவன்ஷி (4) ஆட்டமிழந்தார். குனால் சிங்(0) ஏமாற்றினார். ஜெய்ஸ்வால் (34) நிலைக்கவில்லை. வருண் சக்ரவர்த்தியின் ஒரே ஓவரில் (8வது) துருவ் ஜுரல் (0), ஹசரங்க (0) ஆட்டமிழந்தார்.

8 ஓவர்களில் 72/5 ஓட்டங்கள் எடுத்து தவித்தது. தனிநபராக கேப்டன் ரியான் பராக் மிரட்டினார். மொயீன் அலி ஓவரில் (13வது) 5 சிக்சர் விளாசினார். ஹெட்மெயர், 29 ரன் எடுத்தார். ஹர்ஷித் ராணா பந்தில் ஆட்டமிழந்த பராக் (95, 6x4, 8x6) சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார்.

**ரகானே வியூகம்:**

ராஜஸ்தான் வெற்றிக்கு கடைசி ஓவரில் 22 ஓட்டங்கள் தேவைப்பட்டன. வைபவ் அரோரா பந்துவீசினார். முதல் இரு பந்தில் ஆர்ச்சர் 3 ஓட்டங்கள் எடுத்தார். அடுத்து சுபம் துபே வரிசையாக 6, 4, 6 என விளாச, பதற்றம் அதிகரித்தது. கடைசி ஒரு பந்தில் 3 ஓட்டங்கள் தேவை. இந்த தருணத்தில் அணித் தலைவர் ரகானே அருமையாக களத்தடுப்பை "செட்" செய்தார். "லோங்-ஓப்"ல் சிறந்த "பீல்டரான" ரிங்கு சிங்கை நிறுத்தினார்.

அரோரா வீசிய பந்தை அடித்துவிட்டு 1 ஓட்டம் ஓடினார் சுபம். 2ஆவது ஓட்டத்துக்கு ஓடிய போது, "லோங்-ஓப்" திசையில் இருந்து ரிங்கு சிங் துல்லியமாக பந்தை த்ரோ செய்ய, ஆர்ச்சர் (12) ரன் அவுட்டானார். மொத்தம் 20 ஓட்டங்கள் மட்டும் எடுக்கப்பட, ராஜஸ்தான் அணி 20 ஓவரில் 205/8 ஓட்டங்கள் எடுத்து, தோல்வி அடைந்தது. சுபம்(25) ஆட்டமிழக்காமல் இருந்தார். ஒரு ஓட்டத்தால் வென்ற கொல்கத்தா அணி, "பிளே-ஓப்" வாய்ப்பை தக்க வைத்துக் கொண்டது. ராஜஸ்தான் ஏற்கெனவே "பிளே-ஓப்" வாய்ப்பை இழந்துவிட்டது. ஆட்டநாயகன் விருதை ரசல் வென்றார். (ந-4,7)

**ஒரு ஓவரில் 5 சிக்ஸர்**

கொல்கத்தாவின் மொயீன் அலி ஓவரில் (13வது) 5 சிக்சர் விளாசினார் ராஜஸ்தானின் பராக். இதன் மூலம் பிரிமியர் அரங்கில் ஒரு ஓவரில் 5 சிக்சர் விளாசிய 5வது வீரரானார்.

* பிரிமியர் அரங்கில் 2வது முறையாக ஒரு ஓட்டத்தால் வென்றது கொல்கத்தா. இதற்கு முன் பெங்களூருவுக்கு எதிராக (2024) ஒரு ஓட்டத்தால் வென்றது.

* ராஜஸ்தான் அணி 3வது முறையாக ஒரு ஓட்டத்தில் தோற்றது. முன்னதாக டில்லி (2011), ஹைதராபாத்திற்கு (2024) எதிராக ஒரு ஓட்டத்தால் வீழ்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 154 வாக்களிப்பு நிலையங்கள் வவுனியாவில் நிறுவப்பட்டுள்ளன

## மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர்

(வவுனியா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் வவுனியா மாவட்டத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என வவுனியா மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பி.ஏ. சரத்சந்திர தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா நகரசபைக்கும் 4 பிரதேச சபைகளுக்கும் 1231 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மேலும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 103 ஆகும். அதேவேளை வவுனியா மாவட்டத்தில் 1,29,293 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் 154 வாக்களிப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் இன்று காலை 8 மணியளவில் மாவட்ட செயலகத்திலிருந்து வாக்குப் பெட்டிகள் மற்றும் உபகரணங்கள் சம்பந்தப்பட்ட வாக்குச் சாவடிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இந்நிலையில் நேற்று பொலிஸ் நாய்களைப் பயன்படுத்தி வாக்களிப்பு நிலையங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இதன்போது பொலிஸ் சிறப்புப் படையினரும் இணைந்து இடங்களை ஆய்வு செய்திருந்தனர். (6-8)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 13 . 09 . 1979

மறைவு 25 . 04 . 2025

**Late Mr. Arunan Somaskandamoorthy**

(Frank Furt West Germany)

ஜேர்மனி Frank furtஐ பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு அருணன் சோமஸ்கந்தமூர்த்தி அவர்கள் 25.04.2025 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யாழ். இணுவில் கந்தசாமி கோயிலடியைச் சேர்ந்த முருகேசு சோமஸ்கந்தமூர்த்தி மற்றும் யாழ்.சுண்டுக்குளி சலமன்ஸ் லேனைச் சேர்ந்த சரோஜினி சோமஸ்கந்தமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மகனும் மேலும் காலஞ்சென்றவர்களான முருகேசு, கனகம்மா, அருளானந்தம், நவமணி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06.05.2025 நாளை செவ்வாய்க்கிழமை மதியம் 2 மணிக்கு Muhlheimer Str. 425, 63075 Offenbacham Main இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Lion, A.P.J.Manoharan J.P,
Mr. Mrs, Marina Rathiyalagan குடும்பத்தினர்
Mr. Mrs, Princy Patrick குடும்பத்தினர்
Mr.Mrs, Mary Lourds Ravindran குடும்பத்தினர்
Ms.Prema Arulappu

Mr& Mrs. Edward Yogarani,
PLOT 1, Amman, Nagar,
Rattavikkal, VGGAKKD, NDN,
Thirumalai, Triechey, 620102,

Daisy Kudil'
104/18A, Sangamitha Mw.,
Colombo-13

Mr. Mrs Mary Lourds
Raveendran 133, Mathavaddy
Eralali North, Eralalai, Jaffna

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 300 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 150 | 200 | 150 | 200 |
| தக்காளி | 900 | | 750 | 1200 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 1000 | 250 | 200 |
| கோவா | 300 | 300 | 300 | 500 |
| கரட் | 750-900 | 500 | 1550 | 1000 |
| பூசணி | 220 | 1200 | 200 | 240 |
| புடோல் | 250 | 270 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 150 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 80 | 120-300 | 350 |
| பெரிய வெங்காயம் | 140 | 250 | 120 | 120 |
| பாகற்காய் | 450 | 130 | 500 | 600 |
| வெண்டக்காய் | 300 | 500 | 300 | 500 |
| கருணைக் கிழங்கு | 320 | 200 | 220 | 350 |
| பயற்றங்காய் | 450 | 250 | 500 | 400 |
| லீக்ஸ் | 300 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 350 | 500 | 600 |
| கறிமிளகாய் | 500 | 400 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 400 | 1000-1500 | 2000 |
| போஞ்சி | 850 | 2000 | 550 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 400 | 800 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 80-150 | 300 | 60 | 100 |
| தேசிக்காய் | 250 | 70 | 350 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 280 | 200 | 120-200 | 200-240 |
| இராசவள்ளி | 700 | 150 | 500 | 700 |
| வெங்காயப்பூ | 650 | 500 | -- | 800 |
| முள்ளங்கி | 160 | 1200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 70 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 150 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | 100 100 | 100 | -- |

# இராசிபலன்

05.05.2025
சித்திரை 22, திங்கட்கிழமை
ஆயிலியம் முன்னிரவு 6.51 மணிவரை

அட்டமி பிற்பகல் 12.58 மணிவரை
சுபநேரம் 11.56-1.26 மணிவரை
இராகுகாலம் 7.26-8.56 மணிவரை

சந்திராஷ்டமம்-
பூராடம், உத்தராடம்

வளவன்

**மேஷம்** அழகுசாதனப் பொருட்கள் வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, நண்பர்கள் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள்.

**மகரம்** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், மறக்க முடியாத சம்பவங்கள் நடைபெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், விடாமுயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், உறவினர் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், தொழில் போட்டிகள் மாறும்.

**சிம்மம்** பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், மாற்றங்களினால் ஏற்றம் பெறுவீர்கள், விருந்தினர் வருகையில் சுப விரயங்கள் ஏற்படலாம், சயன சுகக் குறைவான நாள்.

**விருச்சிகம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், விருந்தினர் வருகையுண்டு, பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாளுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், கௌரவமான நாள்.


**தனுசு** எதையும் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்.

**மீனம்** நீண்ட நாட்களாகத் திட்டமிட்டிருந்த காரியம் இன்று கைகூடும், பாராட்டும் புகழும் கூடும், வழிபாட்டால் ஆனந்தம் காணும் நாள், வருமானம் பெருக வழிய மைத்துக் கொள்வீர்கள்.

பல எண்ணங்கள் இருப்பின் ஒரு நல்ல எண்ணம் பிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பில் கள ஆய்வு



(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி தேர்தல் நாளை நடைபெறவுள்ளமையால் வாக்குப் பெட்டிகளை அனுப்பும் நிலையமான யாழ். மத்திய கல்லூரியில், மேற்கொள்ளப்பட்டுவரும் ஒழுங்கமைப்புக்கள் தொடர்பாக யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் நேற்று கள ஆய்வை மேற்கொண்டார்.

இதன்போது யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க கலந்து கொண்டு தேர்தல் ஏற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடினார்.

இக் கள ஆய்வில் மண்டப ஒழுங்குகள், போக்குவரத்து, பொது வசதிகள், நலனோன்பு வசதிகள், மின்சார வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்ற விடயங்கள் ஆய்வு செய்யப்பட்டதுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

இக் கள ஆய்வில் பிரதித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள் மற்றும் உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஆகியோர் பங்குபற்றினர். (6-8-33)

# காங்கேசன்துறை பூங்காவை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சுற்றுலாத்துறை அபிவிருத்தித் திட்டங்களில் உள்ளடங்கப்பட்டுள்ள காங்கேசன்துறை கடற்கரைப் பூங்காவிற்கு யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன் நேற்று முன்தினம் கள விஜயம் செய்தார்.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சினால் யாழ். மாவட்டத்திற்கு 131.20 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு அமைய, காங்கேசன்துறை கடற்கரையில் அமைந்துள்ள சிறுவர் பூங்காவின் பகுதி கடுமையான கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டு சிறுவர் பூங்காவிற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாலும் அவ்விடத்திற்கு அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதனாலும் அதனை விரைவாக புனரமைப்புச் செய்வது தொடர்பாக மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்டது.

அதற்கமைய மாவட்ட செயலர் நிலைமைகளை நேரில் சென்று ஆய்வு செய்தார்.

அதன்போது தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சி. சுதீஸ்னர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ. சிவகுமார் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார்கள். (6-8-33)



வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் ஏற்பாடு செய்த வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவனது பிரிவுபசார நிகழ்வு ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது மாகாண பிரதம செயலாளர் மற்றும் அவர் தம் பாரியார் ஆகியோர் ஆளுநர் செயலக ஊழியர்களால் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.


# INVITATION FOR BID 2025/03
## PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

1. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of **building and road construction** for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million," The certificate of registration (PCA 03) shall be submitted with the bid"**
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 05.05.2025 until 20.05.2025 | | | | | |
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 14.05.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 21.05.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | NP/14/44(04)/Coun/Works/12/2025 | Construction of Internal Access Road, Drainage System, Boundary Wall and Development of Surrounding Area of the Puthukkudiyiruppu Pradeshiya Sabha | Council | 98 | 84 | C7 or Above (Highway) | 5,000.00 | 5-Aug-2025 | 280,000.00 | 2-Sep-2025 |
| 02 | NP/14/44(04)/Coun/Works/13/2025 | Improvement of Town Hall at Market Land Oddusuddan | Council | 8.05 | 84 | C8 or Above (Building) | 3,000.00 | 5-Aug-2025 | 120,000.00 | 2-Sep-2025 |
| 03 | NP/14/44(04)/Coun/Works/14/2025 | Construction of First Floor at Puthukkudiyiruppu Junction Shop | Council | 9.75 | 84 | C8 or Above (Building) | 3,000.00 | 5-Aug-2025 | 150,000.00 | 2-Sep-2025 |
| 04 | NP/14/44(04)/Coun/Works/15/2025 | Construction of Puthukkudiyiruppu Sub Office Building at Puthukkudiyiruppu | Council | 5.08 | 84 | C8 or Above (Building) | 2,000.00 | 5-Aug-2025 | 80,000.00 | 2-Sep-2025 |
| 05 | NP/14/44(04)/Coun/Works/16/2025 | Construction of Betel Nut Shop in Udayarkaddu Market | Council | 4.45 | 84 | C8 or Above (Building) | 2,000.00 | 8-Jul-2025 | 70,000.00 | 5-Aug-2025 |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:0212291023, email: pkips@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Local authority Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu on or before 10.30 A.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**
8. Pre-Bid Conference will be held at Conference Hall, **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu commencing at 10.30 AM as stated in table above.**
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

(C-2890)

**Chairman, Local Authority Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha,**
**Paranthan Road, Puthukkudiyiruppu.**

**05.05.2025**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு வேலிகள் அகற்றியதும் காணிகளை அடையாளப்படுத்தலாம்

## அரசாங்க அதிபர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை மற்றும் பருத்தித்துறை பிரதேசத்தின் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 40.7 ஏக்கர் காணி கடந்த 1 ஆம் திகதி விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் தெல்லிப்பளை பிரதேசத்திற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் நேற்று முன்தினம் நேரடியாக விஜயம் செய் தார்.

அந்த வகையில் வசாவிளான் கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள ஒட்டகப்புலம் புனித அமலோற்பவ மாதா தேவாலயத்தில் பங்குத்தந்தை ஜே.ஏ. அருள்தாஸ் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனையில் பங்கு கொண்டு, அங்கு கூடியிருந்த மக்களுடன் கலந்துரையாடினார்.

அதனைத் தொடர்ந்து விடுவிக்கப்பட்ட 20 ஏக்கர் காணியினைப் பொதுமக்களுடன் சென்று பார்வையிட்டார்.

இதன் போது அப் பிரதேசத்தில் கண்ணிவெடி தொடர்பான பரிசீலனையில் ஈடுபட்டு வரும் Hallo Trust நிறுவனத்துடன் கலந்துரையாடிய அரசாங்க அதிபர், கண்ணிவெடி பரிசீலனையானது நாளை மறுதினம் நிறைவடைவதாக Hallo Trust நிறுவனம் தெரிவித்துள்ளதாகவும், அதனை அடுத்து எதிர்வரும் 8 ஆம் திகதி அன்று தடுப்பு வேலிகள் அகற்றப்பட்டதன் பின்னர் 9 ஆம் திகதி பொதுமக்கள் தமது காணிகளுக்குச் சென்று காணிகளை அடை யாளப்படுத்தி தொடர் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து காங்கேசன்துறை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள மாங் கொல்லை கிராமத்திற்கு (15.13 ஏக்கர் காணி) அரசாங்க அதிபர் விஜயம் செய்தார்.

இவ் விஜயத்தின் போது தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சி.சுதீஸ்னர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ. சிவகுமார், பாதுகாப்புப் படை அதிகாரி, கிராம அலுவலர்கள், Hallo Trust நிறுவன பிரதி நிதிகள் மற்றும் அப் பிரிவுகளுக்குரிய பொது மக்கள் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். (6-8-33)


# INVITATION FOR BID 2025 STAGE-I

## VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI(Kollankaladdy)

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Secretary, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai(Kollankalady)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents (Works specified in Table below)
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **2025.05.05 to 2025.05.19** in between 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai(Kollankalady) T.P:021 224 1130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs. During the period from 2025.05.05 to 2025.05.19 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai(Kollankalady)** on or before 10.30 a.m at 2025.05.20 Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai(Kollankalady)** . commencing at **10.30 AM on 2025.05.09**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2025-05-05 To 2025-05-19 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | 2025-05-09 at 10.30 AM | | | | |
| | Closing and Opening of Bids | | | 2025-05-20 at 10.30 AM | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41(14)/05/02/421 /CF-14/2025 | Reconstruction of Kondalady Vairawar Kovil Road at Keerimalai | 3.82 | 60 | C8 or above (Highway) | 3,000.00 | 38,000.00 | 05/08/2025 | 08/07/2025 |
| NP/14/41(14)/05/02/422 /CF-15/2025 | Reconstruction of Varathalam Road, at Pannalai. | 3.06 | 60 | C8 or above (Highway) | 3,000.00 | 30,000.00 | 05/08/2025 | 08/07/2025 |
| NP/14/41(14)/05/02/423 /CF-16/2025 | Reconstruction of Udaiyarnadappu Road at Mavaikaladdy | 3.28 | 60 | C8 or above (Highway) | 3,000.00 | 33,000.00 | 05/08/2025 | 08/07/2025 |
| NP/14/41(14)/05/02/424 /CF-17/2025 | Reconstruction of Elakesari Ponnaiyah 2nd cross Road, at Kurumpasiddy East | 3.53 | 60 | C8 or above (Highway) | 3,000.00 | 35,000.00 | 05/08/2025 | 08/07/2025 |

Chairman, Divisional Procurement Committee,
ValikamamNorthPradeshiyaSabha, Kankesanthurai(Kollankaladdy). 05.05.2025
(C-2887)


# அலங்கார உற்சவ பூர்த்தி விழா

(யாழ்ப்பாணம்)

இருபாலை கிழக்கு, மானம்புலம் அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் அலங்கார உற்சவப் பூர்த்தி விழா எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் சங்காபிசேகம் இடம்பெற்று பின் திருவூஞ்சல் உற்சவத்துடன் நிறைவடைய உள்ளது என ஆலய தர்மகர்த்தா மா.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். (3-8)

# 24 மணிநேரத்தில் 22 முறைப்பாடுகள்

(கொழும்பு)

நேற்றுக் காலை ஆறு மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 22 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தேர்தலுடன் தொடர்புடைய வன்முறைச் சம்பவங்கள் தொடர்பிலும் 3 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த காலப்பகுதியினுள், பல்வேறு குற்றச் சாட்டுகளின் கீழ், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் 3 வேட்பாளர்களும், அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்கள் 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-8)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்துத் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய ஐம்பதாவது ஆண்டு வசந்த வைகாசி மஹோற்சவம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணிக்கு சப்பறத்திருவிழாவும், 9ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்தோற்சவமும் அன்று மாலை 7 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாகிஸ்தானுக்கான நிதியுதவிகளை நிறுத்தும் முயற்சியில் இந்தியா




(டில்லி)

பாகிஸ்தானுக்கு உலக ளாவிய நிறுவனங்கள் அளிக்கும் நிதியுதவியை மறுபரிசீலனை செய்ய இந்தியா கோரவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட மற்றும் வழங்கப்படவிருக்கும் நிதி மற்றும் கடன்களை மறுபரிசீலனை செய்ய சர்வதேச நாணய நிதியம் உட்பட உலகளாவிய நிதி நிறுவனங்களிடம் இந்தியா கோரிக்கை விடுக்க விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்தோடு, . பாகிஸ்தானில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சீரமைக்க 320 மில்லியன் டொலர் வழங்கவும் ஆசிய மேம்பாட்டு வங்கி உறுதியளித்திருந்தது.

இந்த நிதியுதவி குறித்தும், பாகிஸ்தானுக்காக 20 பில்லியன் டொலர் கடன் வழங்க உலக வங்கி ஒப்புதல் குறித்தும் மறுபரிசீலனை செய்ய இந்தியா கோரிக்கை விடலாம் என தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## பாகிஸ்தான் பொருட்களுக்கு இந்தியாவில் தடை!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்ய இந்திய மத்திய அரசு தடை விதித்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காஷ்மீரில் நடத்தப்பட்ட தாக்குதலையடுத்துப் பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இதற்கிடையே சிந்து நதி நீர் ஒப்பந்தத்தை நிறுத்த இந்தியா எடுத்த முடிவுக்குப் பதிலடியாக இந்தியாவுடனான அனைத்து வர்த்தகத்தையும் பாகிஸ்தான் நிறுத்தி வைத்துள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானில் இருந்து நேரடி, மறைமுகமாக இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு இந்திய அரசு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு மற்றும் நலன்களுக்காக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தடைக்கு விதிவிலக்குத் தேவை என்றால் மத்திய அரசின் முன் ஒப்புதல் பெறுவது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## முடிவுக்கு வரும் ஸ்கைப்

(வோஷிங்டன்)

மைக்ரோசொப்ட் நிறுவனம் தனது செயலியான ஸ்கைப் -ஐ இன்று முதல் மூடப்போவதாக அறிவித்துள்ளது.

எவ்வாறு இருப்பினும் ஸ்கைப்பிற்குப் பதிலாக பயனாளர்கள் மைக்ரோசொப்ட் டீம்ஸ் செயலியை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் ஸ்கைப் பயனாளர்கள் தங்களது பயனர்' விபரங்களைக் கொண்டு டீம்ஸ் செயலியில் இணைந்து கொள்ளலாம் என்றும் பழைய உரையாடல்கள் மற்றும் தொடர்புகள் போன்றவை அப்படியே இருக்கும் என்றும் அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

கொரோனா காலக்கட்டத்தில் ஷூம் செயலி, கூகுள் மீட் உள்ளிட்ட செயலிகளைப் பயனர்கள் பெரிதும் பயன்படுத்தியதால் ஸ்கைப் தளத்திற்கான பயனர்களின் எண்ணிக்கை குறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# ஏவுகணை பரிசோதனை
# ஆத்திரத்தில்
# உச்சம் தொடு

(இஸ்லாமாபாத்)

**450 கி.மீ தூரம் வரை சென்று தாக்கும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையை வெற்றிகரமாகப் பரிசோதித்ததாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.**

அப்தாலி ஆயுத அமைப்பு என்று அழைக்கப்படும் இந்த ஏவுகணை, பயிற்சி INDUS இன் ஒரு பகுதியாக ஏவப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு இந்தியாவுடன் அதிகரித்து வரும் பதற்றங்களுக்கு மத்தியில் பாகிஸ்தானின் ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்டுள்ளமையானது இந்தியாவுடனான பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

காஷ்மீர் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மோதல் போக்கு அதிகரித்த வண்ணமே காணப்படுகிறது.

தற்போதுள்ள பதற்றங்களை மேலும் அதிகரிக்கும் வகையில் பாகிஸ்தான் மற்றுமொரு காரியத்தை செய்யத் திட்டமிட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்த நிலையில், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைச் சோதனையை பாகிஸ்தான் நடத்த முன்னாயத்தங்களைச் செய்து வருதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.


காஷ்மீர் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில், இந்தியா நடத்தும் விசாரணைகளுக்கு பாகிஸ்தான் ஒத்துழைப்பு வழங்குமாறு, அமெரிக்கா உட்பட பல சர்வதேச நாடுகள் தொடர்ந்தும் வலியுறுத்தி நிற்கின்றன.

எனினும், அதற்கு மாறாக செயற்படும் பாகிஸ்தான்,

## சவூதி அரேபியாவுக்கு ஏவுகணைகளை விற்பனை செய்யும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

சவூதி அரேபியாவுக்கு 3.5 பில்லியன் டொலர் மதிப்பிலான ஏவுகணைகளை விற்பனை செய்ய அமெரிக்கா ஆரம்பகால அனுமதியை வழங்கியுள்ளது.




அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இந்த மாதம் இறுதியில் சவுதி அரேபியாவுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

இந்த நிலையில் அமெரிக்கா ஒப்புதல் வழங்கியுள்ளது.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக F-15 போர் விமானம் அதிக அளவில் வைத்திருக்கும் நாடு சவுதி அரேபியா ஆகும். அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்றதும் அடுத்த 4 ஆண்டுகளில் 600 பில்லியன் டொலர் அளவிற்கு அமெரிக்காவில் முதலீடு செய்ய இருப்பதாக சவுதி அரேபியா முன்னதாக அறிவித்திருந்தது.

இதேவேளை அமெரிக்காவிடம் இருந்து வாங்கும் ஏவுகணைகளை சவுதி அரேபியா போர் விமானத்தில் பயன்படுத்த இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

## மீ
## பி

(கன்

அவு

பெற்ற

லில் ஆ

லாளர்

நிலையி

அல்பனி

பிற

வேறுப

செய்வ

பாணிய

துள்ள

னீஸ்

தேர்

யான

யிட்ட

குறிப்பி

அவ

விக்கை

வின்

தற்காக

ளனர்.

நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...னையில் பாகிஸ்தான் ...ல் இந்தியா!

## ...டும் பதற்றம்

...டம்
...றிக
...வித்...



தற்போது கண்டம் விட்டு கண்டம்பாயும் பாலிஸ்டிக் வகை ஏவுகணைச் சோதனைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, இதற்கான விண்வெளி எச்சரிக்கையும் வெளியாகியுள்ளதாக கூறப்படுகிறது. இதேவேளை, கடந்த மாதம் 27 ஆம் திகதி மற்றும் 30 ஆம் திகதிகளிலும் குறித்த எச்சரிக்கை வெளியாகியிருந்ததாகவும், ஆனால் அது தொடர்பான எந்த ஏவுகணைச் சோதனைகளும் நடத்தப்படவில்லை என்றும் இந்தியத் தரப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறானதொரு பின்னணியில், இம்முறை ஏவுகணை சோதனைகளை நடத்தப்போவதாகப் பாகிஸ்தான் அறிவித்துள்ள இடமானது, இந்தியக் கடல் எல்லைக்கு அருகில் இருக்கின்றமையால் தற்போதுள்ள பதற்றம் மேலும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது. (நி-8)

# சிங்கப்பூர் பொதுத் தேர்தல் மீண்டும் ஆட்சியை கைப்பற்றியது ஆளும் கட்சி




(சிங்கப்பூர்)

சிங்கப்பூர் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற ஆளும் கட்சியான மக்கள் செயல் கட்சி மீண்டும் ஆட்சியை கைப்பற்றியுள்ள நிலையில், லோரன்ஸ் வோங் மீண்டும் பிரதமராகிறார்.

சிங்கப்பூர் பொதுத் தேர்தலில், ஆளும் மக்கள் செயல் கட்சி 97 தொகுதிகளில் போட்டியிட்டு 87 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை மீண்டும் தக்கவைத்துள்ளது.

சிங்கப்பூர் பொதுத் தேர்தல் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்தத் தேர்தலில் ஆளும் மக்கள் செயல் கட்சிக்கும், எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சிக்கும் இடையே போட்டி நிலவியது.

கடந்த 2020 ஆம் ஆண்டு இடம்பெற்ற சிங்கப்பூரின் பொதுத்தேர்தலில் மக்கள் செயல் கட்சி 83 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# மீண்டும் அவுஸ்திரேலியாவின் பிரதமர் ஆகிறார் அல்பனீஸ்

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சி வெற்றி பெற்ற நிலையில், மீண்டும் அன்டனி அல்பனீஸ் பிரதமராகிறார்.



பிற நாடுகளில் இருந்து வேறுபட்டு இருப்பதை உறுதி செய்வதற்காக அவுஸ்திரேலிய பாணியில் மக்கள் வாக்களித்துள்ளனர் என அன்டனி அல்பனீஸ் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியானதையடுத்து கருத்து வெளியிட்ட போது அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், அவுஸ்திரேலியாவின் பண்பாட்டை மீட்டெடுப்பதற்காக மக்கள் வாக்களித்துள்ளனர்.

நாம் எந்தவொரு வெளிநாட்டிடம் இருந்தும் கொள்கைகளைக் கடன் வாங்கவோ, பிரதியெடுக்கவோ தேவையில்லை. நமக்கென்று ஒரு தனித்தன்மை இருக்கிறது எனத் தெரிவித்தார்.

அவுஸ்திரேலிய தேர்தல் வரலாற்றில் கடந்த 21 ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகப் பதவியேற்கும் முதல் அவுஸ்திரேலிய பிரதமராக அன்டனி அல்பானீஸ் காணப்படுகின்றார்.

அவுஸ்திரேலியாவில் மொத்தம் 150 பாராளுமன்ற தொகுதிகள் உள்ளன. இதில் 76 தொகுதிகளை கைப்பற்றும் கட்சி ஆட்சியமைக்கும்.

அந்த வகையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற அவுஸ்திரேலிய பாராளுமன்ற தேர்தலில், அவுஸ்திரேலியாவின் ஆளும் கட்சியான தொழிலாளர் கட்சியும், எதிர்க் கட்சியான கன்சர்வேடிவ் கட்சியும் போட்டியிட்டன.

பிரதமர் அன்டனி அல்பனீஸ் தலைமையில் தொழிலாளர் கட்சி களமிறங்கியது. எதிர்க்கட்சி தலைவர் பீற்றர் டட்டன் தலைமையில் கன்சர்வேடிவ் கட்சி களமிறங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அமெரிக்காவில் வாகன விபத்து 7 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள யெல்லோஸ்டோன் தேசியப் பூங்காவிற்கு செல்லும் நெடுஞ்சாலையில் லொறியொன்றுடன் சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் இத்தாலியைச் சேர்ந்த இரண்டு பேர் உட்பட 7 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற இவ் விபத்தில் எட்டுப் பேர் காயம் அடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ் விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகரகம தேசிய கல்வி நிறுவகத்தின் (NIE) ஆய்வுகள் அபிவிருத்தி பிரிவு பணிப்பாளர் கலாநிதி எஸ்.கே பிரபாகரன் எழுதிய கல்வி ஆய்வு அடிப்படைகள் என்ற நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மண்டபத்தில் அதிபர் தில்லையம்பலம் வரதன் தலைமையில் நடைபெற்றது. (படம்: சிவசாந்தன்)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 12
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Banking Course, Assistant Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15396

பிறப்பு:1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:32 1/4
உயரம்:5'9"
தகைமை/தொழில்: Manager(ஜேர்மனி)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15397

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்: பூராடம்
உயரம்:5'4"
தகைமை/தொழில்:A/L, Electrician
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: B/15398

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:ரோகினி
8 இல் செவ்
கி.பா:30
உயரம்:6'1"
தகைமை/தொழில்: BSc, MSc, UK
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/15399

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 23 1/2
1 இல் செவ்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: மிருகவைத்தியர்
எதிர்பார்ப்பு: BScபட்டதாரி. வைத்தியர்
தொ.இ: B/15400

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 26 1/2
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Bsc(Hons), Engineer
எதிர்பார்ப்பு: Engineer, Accountant
தொ.இ: G/12804

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்:மிருகசீரீடம்
உயரம்: 5'2"
தகைமை/ தொழில்:BA.விவாகரத்து
எதிர்பார்ப்பு: அரச தொழில்/ வெளிநாடு
தொ.இ: G/14366

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: மகம்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: பரீட்சைப்பகுதிப் பணிப்பாளர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு
தொ.இ: G/12872

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:உத்திரட்டாதி
சூரி செவ் 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA பட்டதாரி
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/13774

பிறப்பு: 1996 இந்து
நட்சத்திரம்:பரணி
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BA திட்டமிடல்
எதிர்பார்ப்பு:அரச வேலை
தொ.இ: G/13927

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 365



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஆளுமைக் கோளாறுகள்

ஒருவன் எப்படி நடந்து கொள்கின்றான் என்பதை வைத்துத் தான் அந்த ஆள் எப்படி என்பதை நாம் முடிவு செய்கின்றோம்.ஆளுமை என்று சொல்கின்றோம் அல்லவா? அதற்கு சூழ்நிலைகளை ஆளுகின்ற தன்மை என்று விளக்கம் கொடுக்கின்றார் ஒரு உளவியல் நிபுணர்.

சரி ஒரு மனிதனுடைய ஆளுமையை உருவாக்குகின்ற விடயங்கள் என்ன என்ன? பிறப்பு, வளர்க்கப்படுகின்ற விதம், படிப்பு, நண்பர்கள் சமுதாயம் இப்படி நிறைய உண்டு.ஆளுமையின் அடிப்படையில் சில மனநோய்கள் உண்டாகின்றது.அதெல்லாம் என்ன என்பதை தெரிந்து வைத்துக்கொண்டோம் என்றால் நம்முடன் இருப்பவர்களை அடையாளம் கண்டுபிடிக்க அது ரொம்ப உபயோகமாக இருக்கும்.

பரனாய்டு ஆளுமை என்று ஒன்று. இந்த கோளாறு உள்ளவர்கள் எப்படி இருப்பார்கள் தெரியுமா? அதிக உணர்ச்சி, சந்தேகம், பொறாமை, அதிகமாக இருக்கும். வளைந்து கொடுக்க மாட்டார்கள். அடுத்தவர்களோடு இணக்கமான உறவு இருக்காது. அவர்கள் செய்யும் தப்பெல்லாம் அடுத்தவர்களைக் குறை சொல்லிக்கொண்டிருப்பார்கள் இது ஒரு ரகம்.

அடுத்தது ஸ்கிசாய்டு ஆளுமை. இந்தக் கோளாறு உடையவர்கள் அடுத்தவர்களுடன் பழகக் கூச்சப்படுவார்கள். சின்ன வயதிலேயே இது ஆரம்பமாகிவிட்டது. பகலில் கனவிலே சஞ்சரிப்பார்கள். அவர்களுடைய விரோதம் கோபம் இதைக் கூட வெளியே காட்டிக்கொள்ள முடியாமலே இருப்பார்கள். இவர்களுக்கு அகமுகம்! பிரச்சினைகளிலே இருந்து ஒதுங்கிவிட எதிலேயும் ஈடுபாடு இல்லாதவர்களாக இருப்பார்கள். இப்படி ஒரு ரகம்!

அடுத்தது சைக்லோ தைமிக் ஆளுமை.உணர்ச்சிகளிலே ஏற்றத் தாழ்வு அதிகமாக இருக்கும். ஒரு சமயம் பார்த்தால் மகிழ்ச்சியாக இருப்பார்கள். சில சமயம் சோகமாக உட்கார்ந்திருப்பார்கள். அவர்கள் மனநிலைக்குத் தகுந்த மாதிரி சமூக நிகழ்ச்சிகளிலே பங்கெடுத்துக் கொள்வார்கள்.

இன்னொரு வகை எண்ணப்பீடிகை ஆளுமை. இவர்களுக்கு எல்லாம் கரக்ட் ஆக இருக்க வேண்டும்! சட்டதிட்டம் எதிலேயும் ஒரு ஒழுங்கு முறை. இப்படி எதிர்பார்க்கின்ற மனோபாவம்? இவர்கள் எதிர்பார்ப்பிற்கு வன்முறைக்கும் மற்றவர்கள் கட்டுப்படவேண்டும் என்று நினைப்பார்கள். இந்த நிலைமை நீடித்தால் என்ன ஆகும் தெரியுமா? அலைக்கழிக்கின்ற எண்ணங்கள் திரும்பத்திரும்ப ஒரே செயலை செய்யத் தூண்டுகின்ற மனத்தளர்ச்சிக்கு ஆளாகிவிடுவார்கள்.

அடுத்தது ஹிஸ்டீரியா ஆளுமை. சின்னச் சின்ன விடயத்திற்கெல்லாம் பெரிதுப்படுத்தி நாடகமாக்குகின்ற நடிகர்கள் இவர்கள். உணர்ச்சி அதிகம் உள்ளவர்கள். இவர்கள் மன எழுச்சியிலே பக்குவமின்மை–குழந்தைத்தனம்–முதிர்ச்சியின்மை எல்லாம் இருக்கும். தன்னலம்மிக்க குணம். பிறர் தன்னை மட்டுமே கவனிக்க வேண்டும் என்று நினைத்து செயற்படுவார்கள்.

அடுத்த ரகம் வளர்ச்சியற்ற ஆளுமை

அடுத்தவர்களே இணங்கிப் போக முடியாதவர்கள். அறிவு, மனவெழுச்சி, சமூக உறவு இதுலேயெல்லாம் போதுமான வளர்ச்சியையும், நிறைவையும் பெற முடியாதவர்கள். இவர்களாலே வாழ்க்கையிலே முன்னேற முடியாது. பிச்சைக்காரர்கள்.. குற்றவாளிகள்.. இவர்களிடம் எல்லாம் இது மாதிரியான ஆளுமை அதிகமாக இருக்கும்.

அடுத்தது சோர்வுடைய ஆளுமை

எதிலும் உற்சாகம் இல்லாமல் சோர்ந்து போய் இருப்பார்கள். அதுக்கெல்லாம் நமக்கு வலிமை இல்லை என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். சின்ன விடயங்களுக்கு எல்லாம் அதிர்ச்சி அடைவார்கள். வாழ்வின் சுவையை அனுபவிக்க முடியாதவர்கள்.

இன்னொரு ரகம் கொதித்தெழும் ஆளுமை

எதுக்கெடுத்தாலும் ஆத்திரம், குரோதம், வன்செயல் இதில் எல்லாம் ஈடுபாடு இப்படி உள்ளவர்கள்.

நத்தை வகை ஆளுமை என்று ஒன்று!

அடுத்தவர்கள் மேலே விரோதம் இருக்கும் அடிக்கணும் என்கிற எண்ணம் இருக்கும். ஆனால் அதை அப்படியே வெளியே காட்டாமல் அதே சமயம் அமைதியான முறையிலே வெறுப்பை வெளிக்காட்டுகின்ற ரகம். இவங்கள் எல்லாம் பேசாமல் கம்முன்னு இருந்து கொண்டு நினைத்ததை நிறைவேற்றுபவர்கள்.

முன் ஜாக்கிரதை ஆளுமை–ஒரு ரகம்.

பாதுகாப்பின்மை–சந்தேகம்–முழுமையின்மை–அரைவேக் காட்டுத் தனம் இந்த மனபோக்கு அதிகம் இருப்பதனாலே அகம்பாவம், பிடிவாதம், எச்சரிக்கை எல்லாம் அளவுக்கு மீறி இருக்கும்.

இதுவரைக்கும் நாம் பேசிக்கெண்டிருந்த ஆளுமைப் பண்புகள் அளவுக்கு அதிகமாகப் போய்விட்டது என்றால் ஆளுமைக் கோளாறுகள் ஏற்படும். அதன் அடிப்படையிலே மனவியாதிகள் வரும்.


அதனாலே இணக்கமான எல்லோரும் விரும்பும் இயல்பான ஆளுமையைப் பெற நாம் முயற்சி செய்ய வேண்டும்.

ஒருத்தர் ஒரு மனோதத்துவ வைத்தியரைத் தேடி வந்தார்.டாக்டர் எனக்கு மனதில் ஏதோ வியாதி. ஆளுமைக் கோளாறு. அதாவது எனக்கு சீக்கிரமாக செத்து போனாலும் பரவாயில்லை என்று தோன்றுகிறது என்றார்.

[illegible] வைத்தியர் சரி அப்படி என்றால் அங்கேயே இருங்கள். நான் [illegible] பார்க்கிறேன் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்கள் மீது தாக்குதல்
## நாகப்பட்டின மீனவர்கள் பணிப்புறக்கணிப்பு



(சென்னை)

இந்தியாவின் கிழக்கு கடற்பகுதியில் வைத்து, 24 இந்திய மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த தாக்குதலைக் கண்டித்து நாகப்பட்டின மீனவர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த சிலர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக இந்திய மீனவர்கள் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மீனவர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்திய கடல் எல்லைப்பகுதியில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இந்திய மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி-8)

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள குற்றவாளிகள் விரைவில் நாட்டிற்கு

(கொழும்பு)

நாட்டில் குற்றங்களைச் செய்து விட்டு வெளிநாடுகளுக்குத் தப்பிச் சென்ற பலரை மீண்டும் கைது செய்து நாட்டிற்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பொலிஸ் அறிவித்துள்ளது.

டுபாய், இந்தியா மற்றும் கனடா போன்ற நாடுகளில் தற்போது வசிக்கும் இது போன்ற 20 இற்கும் மேற்பட்ட குற்றவாளிகளை மீண்டும் கைது செய்து அழைத்து வருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

(நி-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வெயிலிற்கு உகந்த இயற்கைப் பானம் இளநீர்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

இளநீரில் நீர்ச்சத்து அதிகம் உண்டு. இதைவிட முக்கியமான நுண்ணுயிர்ச் சத்துக்கள் இளநீரில் உண்டு. கல்சியம், மக்னீசியம், சோடியம், பொட்டாசியம் சத்துக்கள் நிறைய உண்டு. இளநீர் இனிப்பாக இருப்பதற்கு சொற்ப அளவு சர்க்கரைச் சத்தும் உண்டு.


இளநீரில் இருக்கும் நீர்ச் சத்தும், நுண்ணுயிர்ச்சத்துக்களும் உடல் ஆரோக்கியத்திற்கு மிகமிக அவசியம். குழந்தைகள், நோயாளிகள், கர்ப்பிணித்தாய்மார்கள் இவ் இளநீரை தாராளமாக எடுக்கலாம்.

நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தலாமா எனில் பயன்படுத்தலாம்.

எவ்வாறு? எப்படி? பயன்படுத்தலாம் என்பதுதான் அவசியம் தெரிந்திருக்க வேண்டும். நல்ல உடற்பயிற்சி மேற் கொள்ளுகிறீர்கள் அல்லது நிறைய நேரம் வெயிலில் அலைந்து திரிந்தால் அருந்தலாம். தினசரி ஒரு இளநீர் அருந்தினால் உடல் ஆரோக்கியத்திற்குச் சிறந்தது. கோடைகாலத்தில் ஏற்படும் அதிக வியர்வை, தாகம், தேகச்சூடு உடலில் பலவீனத்தை ஏற்படுத்தும்.

இயற்கை இக் கோடையை தாங்குவதற்கு கிடைத்த இயற்கைப் பானம் தான் இளநீர். இளநீரில் காணப்படும் கனிமங்கள் கோடைக்காலத்தில் ஏற்படும் அதிக வியர்வை, வியர்க்குரு, தோல் பிரச்சினைகள் போன்றவற்றை நீக்கும் ஆற்றல் இளநீருக்கு உண்டு. இதற்கு தினமும் 250-300 மில்லிலீற்றர் இளநீரை அருந்த வேண்டும்.

ஒரு இளநீர் அருந்தினால் கிட்டத்தட்ட 40 கலோரிகள் தான் கிடைக்கும். நிறைய



ஊட்டச் சத்துக்களும், குறைந்த கலோரி பெறுமானமும் உள்ளதால் காலையில் வெறும் வயிற்றில் இளநீர் அருந்தலாம்.

கோடைகாலத்தில் 2- 2 1/2 லீற்றர் தண்ணீர் அவசியம் அருந்த வேண்டும். நிறைய வியர்வை இருந்தால் 3லீற்றர் வரை அருந்தலாம்.

அப்போ 1 டம்ளர் இளநீர் அருந்தினால் இன்னும் சிறந்த பலனைக் கொடுக்கும்.

இளநீரில் காணப்படும் பொட்டாசியம் சத்தானது குருதி அமுக்கத்தை சீராகப் பேண உதவுகிறது.

இருதயப் பிரச்சினைகளையும் தவிர்க்கக் கூடியதாகவும் இருக்கும். கல்சியம் சத்து என்புகளையும் பற்களையும் என்புகளின் அடர்த்தியையும் பராமரிக்கக் கூடியது. இளநீர் அருந்துவதால் கல்சியச் சத்தும் எமக்கு கிடைக்கின்றது.

இளநீரில் காணப்படும் மக்னீசியம் சத்தானது இரத்தத்தில் காணப்படும் சீனிச்சத்தை பராமரிக்கவும், நரம்புகளைப் பலப்படுத்தவும் உதவுகிறது. காலை மட்டுமல்ல எந்த நேரத்திலும் இளநீர் அருந்தலாம். ஆனால் சாப்பிட முன்பு அருந்தும் போது இளநீரில் காணப்படும் நீர்ச்சத்தானது வயிற்றை நிரப்புவது மட்டுமல்லாது சமிபாட்டிற்குத் தேவையான நொதியங்களின் சுரப்பையும் பாதிப்பதால் சமிபாடு பாதிக்கப்படும்.

எனவே உணவு இடைவேளைகளின் போது அருந்துவது சிறந்த பலனைக் கொடுக்கும். இளமையாக இருக்கும் இளநீர் அதாவது தேங்காய் அல்லாது வழுக்கையுடன் காணப்படும் இளநீர் சிறந்த ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாக இருக்கும். இளநீர்கள் வெயிலில் வாடாமல் மரத்திலிருந்து பறித்த உடனே அருந்தினால் சிறந்த மருத்துவ குணங்கள் கொண்டதாக இருக்கும். பச்சை இளநீரையும் செவ்விளநீர் நிற இளநீர் ஆகிய இரண்டு வகைகளும் அருந்துவதற்கு சிறந்ததாகும். தேங்காய் உருவான பின்பு இளநீரைப் பயன்படுத்தினால் காபோவைத்ரேற்று சத்தானது இளநீரில் அதிகரிக்கும்.

எனவே வழுக்கையாக இருக்கும் இளநீரே அருந்துவதற்கு சிறந்த மருத்துவக் குணத்தைக் கொடுக்கும். சிறுநீரகப் பிரச்சினை உள்ளவர்கள் வைத்திய ஆலோசனைப்படி இளநீரைப் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் இளநீரில் காணப்படும் அதிகளவான பொட்டாசியம் சத்து சிறுநீரகத்தைப் பாதிக்கலாம். இரத்தத்தில் பொட்டாசியம் சத்து அதிகமாக உள்ளவர்கள் இளநீர் பயன்படுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

வயதானவர்கள் சில வேளை தண்ணீர் குடிக்க விருப்பமில்லாமல் இருப்பதாகக் கூறுவார்கள். அவர்கள் இளநீர் தாராளமாக அருந்தலாம். ஆனால் இரத்தத்தில் பொட்டாசியம் சத்து சாதாரண அளவில் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

கார்த்திகை, மார்கழி போன்ற மாதங்களில் உடல் வாகை பொறுத்து சிலருக்கு இளநீர் அருந்தினால் சளி, இருமல் தொல்லை ஏற்படலாம். அதேபோல் குழந்தைகளுக்கும் ஏற்படும். அவர்கள் கூட மத்தியான நேரங்களில், வெயில் எறிக்கும் போது இளநீர் அருந்தலாம். வெறும் வயிற்றில், காலைப்பொழுதில், மாலைப்பொழுதில் மட்டும் அருந்துவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மற்றப்படி எல்லா மாதங்களிலும் இளநீர் அருந்தலாம்.

இளநீரிலிருந்து தயாரிக்கப்படும் பாயாசம் போன்றவற்றில் இளநீரை நெருப்பில் வைத்து பயன்படுத்தினால் இளநீரின் சத்துக்கள் எல்லாம் அழிந்து விடும். எனவே பாயாசம் காய்ச்சி தணலை நன்கு குறைத்த பின்பு இறக்கும் சமயத்தில் இளநீரை விட்டு இறக்கிப் பயன்படுத்துதல் ஆரோக்கியமானது.

இளநீரை வழுக்கையுடன் சேர்த்து மிக்ஸியில் அடித்துப் பயன்படுத்தும் போது செலானியம், துத்தநாகம், மங்கனீஸ் சத்தும் இளநீரின் சத்துக்களுடன் சேர்த்துக் கிடைக்கின்றது. இது உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிப்பதுடன் இரத்த சோகை ஏற்படாமலும் தடுக்கின்றது. இரத்தத்தில் ஈமோகுளோபின் அளவையும் சீராகப் பேண உதவுகின்றது.

கோடை காலத்தில் ஏற்படும் வியர்க்குரு, அதிக வியர்வையினால் ஏற்படும் தோல் பிரச்சினைகளுக்கு இளநீருடன் வழுக்கையையும் சேர்த்து நன்றாக பிசைந்து முகம், கழுத்துப் பகுதியில் பூசி 30 நிமிட நேரம் ஊறவைத்த பிறகு குளிர்ந்த நீரில் கழுவி வர தோல் மிருதுவாகவும் குளிர்ச்சியாகவும் பேணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 763





கொள்கிறேன். மிக முக்கியமான ஒரு நோக்கத்துடன் தான் வந்தியத்தேவனை உயிரோடு விடச் சொன்னாள் ராணி. அதை நீங்கள் இப்போது தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. வந்தியத்தேவனைப் பற்றிக் கவலை வேண்டாம். ஆனால் அந்த வைஷ்ணவனைக் கண்டால் சிறிதும் தயங்காமல் உயிரை வாங்கிவிட்டு மறு காரியம் பாருங்கள் என்றான் ரவிதாஸன்.

அவர்கள் ஆதித்த கரிகாலனைச் சந்திக்காமல் தடுக்கப் பார்க்க வேண்டும்." "தும்பை விட்டு வாலைப் பிடிக்கிற கதையாக இருக்கிறது. கையில் அகப்பட்டவனை அங்கே ஒரு வழியாகத் தீர்த்திருக்கலாம். ராணி எதற்காக அவனை உயிரோடு விடச் சொன்னாள் என்று தெரியவில்லை."

"தோழர்களே! எனக்கும் அது அப்போது புரியாமல் தான் இருந்தது. அப்புறம் தெரிந்து கொண்டேன் ராணி என்னையும் மிஞ்சி விட்டாள் என்பதை ஒத்துக்

### ஐந்தாம் அத்தியாயம்
### பயங்கர நிலவறை

பிலத்துவாரத்துக்குள் நுழைந்த வந்தியத்தேவன் சில படிகள் இறங்கிச் சென்றான். பிறகு சம தரையாக இருந்தது. மிக மிக இலேசாக வெளிச்சம் தெரிந்தது. பத்துப் பதினைந்து அடி சென்றான். ஏதோ வண்டிச் சக்கரம் சுற்றுவது போல் ஒரு சத்தம் கேட்டது. திடீரென்று இருள் வந்து கவிந்து அவனை விழுங்கிக் கொண்டது. சம்பந்தமில்லாத காரியத்தில் தலையிடக்கூடாது என்று பல முறை தீர்மானித்துக் கொண்டதை எண்ணினான்.

'நாம் புறப்பட்ட காரியம் என்ன? எவ்வளவு முக்கியமானது? அதை விடுத்து இப்போது இந்தப் பாதாளச் சுரங்க வழியில் பிரவேசித்தோமே? இது எங்கே கொண்டு போய்ச் சேர்க்குமோ? என்னமோ! அங்கே என்னென்ன வகை அபாயங்கள் காத்திருக்குமோ? என்ன அறிவீனமான காரியத்தில் இறங்கினோம். நம்முடைய அவசர புத்தி நம்மை விட்டு எப்போது போகப் போகிறது?'


இந்த எண்ணங்கள் அவன் கால்களின் வேகத்தைக் குறைத்தன. திரும்பிப் போய்விடலாம் என்று எண்ணி, வந்த வழியே திரும்பினான் படிகள் தட்டுப்பட்டன. ஆனால் மேலே துவாரத்தைக் காணவில்லை. தடவித் தடவிப் பார்த்தான் பயனில்லை. யாரோ மேலிருந்து துவாரத்தை மூடியிருக்க வேண்டும். வந்தியத்தேவனுக்கு வியர்த்து விறுவிறுத்து விட்டது. மேலும் பரபரப்புடன், மூடப்பட்ட துவாரத்தைத் திறப்பதற்கு முயன்றான். இதற்குள், எங்கேயோ வெகுதூரத்தில், யாரோ பேசும் குரல் கேட்பது போலிருந்தது. வேறு வேறு குரல்கள் கேட்டன. ஒரு வேளை அவன் எங்கிருந்து பிலத்துவாரத்தில் பிரவேசித்தானோ, அந்த ஐயனார் கோவில் வாசலில் மனிதர்கள் பேசும் குரலாகவும் இருக்கலாம். இடும்பன்காரி யாரையோ எதிர்பார்த்துத்தானே விளக்குப் போட்டான்? அவர்கள் வந்திருக்கலாம், இது உண்மையாகுமானால் அவன் அச்சமயம் பிலத்துவாரத்தைத் திறக்க வழி கண்டுபிடித்து வெளியேறுதல் பெருந்தவறாக முடியலாம். அவர்கள் எத்தனை நேரம் அங்கு உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்களோ தெரியாது. இடும்பன்காரியின் கூட்டாளிகளான ரவிதாஸன் முதலிய சதிகாரர்களானால் நெடுநேரம் பேசிக் கொண்டிருக்க கூடும். அவர்கள் எதற்காக இங்கே கூடியிருக்கிறார்கள்? என்ன பேசுகிறார்கள்?

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## பூனை பிரபு



முன்னொரு காலத்தில் உழவன் ஒருவன் பூனை ஒன்றை வளர்த்து வந்தான். வயதாகிப் போன அந்தப் பூனையால் எலிகளைப் பிடிக்க முடியவில்லை.

இந்தப் பூனையால் எந்தப் பயனும் இல்லை. இதைக் காட்டில் விட்டு விடுவோம், என்று நினைத்தான் அவன். அப்படியே அதைக் காட்டில் விட்டுவிட்டு வந்தான்.

அங்கே உலவிக் கொண்டிருந்தது பூனை. பெண் நரி ஒன்று அதைப் பார்த்தது.

"ஐயா! தாங்கள் யார்? இப்பொழுது தான் தங்களை முதன் முறையாகப் பார்க்கிறேன்" என்று கேட்டது அது. "நான் பூனை பிரபு" என்று கம்பீரமாகச் சொன்னது பூனை. அதன் அழகிலும் கம்பீரத்திலும் மயங்கியது நரி. "ஐயா! என்னைத் திருமணம் செய்து கொள்ளுங்கள். உண்மையுள்ள மனைவியாக நான் நடந்து கொள்வேன். உங்கள் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்றி வைப்பேன்" என்றது.

பூனையும் திருமணத்திற்கு ஒப்புக் கொண்டது. இரண்டிற்கும் திருமணம் நடந்தது. தான் சொன்னபடியே நடந்தது நரி. தனியே சென்று கோழிக் குஞ்சுகளைப் பிடித்து வரும் பூனைக்கு உண்ணக் கொடுக்கும். சில சமயம் அது பட்டினியாகவே கிடக்கும்.

ஒரு நாள் உணவு தேடச் சென்றது நரி. வழியில் அதை முயல் ஒன்று சந்தித்தது. "நண்பனே! உன் வீட்டிற்கு நான் வரலாம் என்று இருக்கிறேன். எப்பொழுது வருவது?" என்று கேட்டது முயல்.

"என் வீட்டிற்கு வரும் எண்ணத்தை விட்டு விடு. அங்கே பூனை பிரபு இருக்கிறார். அவர் கொடூரமானவர். உன்னைக் கண்டால் ஒரு நொடியில் கொன்று தின்று விடுவார்" என்றது நரி.

அங்கிருந்து ஓடிய முயல் வழியில் ஓநாயைச் சந்தித்தது. உனக்குச் செய்தி தெரியுமா? நரியின் வீட்டில் பூனை பிரபு இருக்கிறாராம். அவர் மிகக் கொடூரமானவராம். யாரையும் கொன்று தின்று விடுவாராம்" என்றது அது.

இந்த விந்தையான செய்தியைப் பன்றியிடம் சொன்னது ஓநாய். பன்றி இதைக் கரடியிடம் சொன்னது.

முயல், ஓநாய், பன்றி, கரடி நான்கும் ஒன்றாகக் கூடின. "எப்படியாவது பூனை பிரபுவை நாம் பார்க்க வேண்டுமே?" என்றது கரடி.

"உயிரின் மீது உனக்கு ஆசை இல்லையா?" என்று கேட்டது முயல். எனக்கு நல்ல வழி ஒன்று தோன்றுகிறது நாம் நால்வரும் சேர்ந்து பெரிய விருந்திற்கு ஏற்பாடு செய்வோம். பூனை பிரபுவையும் நரியையும் விருந்திற்கு அழைப்போம்" என்றது ஓநாய். எல்லோரும் இதற்கு ஒப்புக்கொண்டனர்.

மேசையின் மேல் விதவிதமான உணவுப் பொருள்கள் பரிமாறப்பட்டன.

"யார் சென்று பூனை பிரபுவை அழைப்பது?" என்ற சிக்கல் எழுந்தது. "எனக்கு தூங்கி வழிகின்ற முகம், நான் சென்று எப்படி அழைப்பேன்?" என்று மறுத்தது பன்றி. "எனக்கு அதிக வயதாகி விட்டது. உடல் நலமும் சரியில்லை என்றது ஓநாய். "ஏதேனும் ஆபத்து என்றால் என்னால் வேகமாக ஓட முடியாது" என்றது கரடி.

மூன்றும் முயலைப் பார்த்து, "விருந்துச் செய்தியை நீதான் சொல்லிவர வேண்டும்" என்றன.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்பவரே தன்னை முழுமையான சக்திசாலியாய் மாற்றிக் கொள்கிறார். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்களிக்கும் உரிமை உங்கள் கைகளில்

நாளை உள்ளூராட்சி சபைத் தேர்தல். தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன.

ஆம், மே 6ஆம் திகதி நடைபெறப்போகும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அனைத்து மக்களும் வாக்களிக்க வேண்டும். அவ்வாறு பொதுமக்கள் வாக்களிக்கும்போதுதான் பிரதிநிதிகளின் தெரிவும் சரியானதாக அமையும்.

எனினும் தேர்தல் என்ற விடயத்தில் எம் மக்களிடையே சலிப்பு ஏற்பட்டுள்ளமை மறுக்க முடியாத உண்மை.

அதற்கு நியாயமான காரணங்களும் உண்டு. அதாவது ஒவ்வொரு தேர்தல்களின் போதும் எமது மக்கள் நம்பிக்கையோடு வாக்களித்தனர்.

ஆனால் அவர்களுக்குக் கிடைத்தது ஏமாற்றங்களும் தோல்விகளுமே. இந்நிலையில் தான், வாக்களித்து என்ன பயன் என்ற கேள்வி மக்களிடையே எழுகிறது.

உண்மையில் பொதுமக்கள் மத்தியில் எழுந்த கேள்விக்கான பதில்கள் இன்னமும் தொக்கி நிற்கின்ற வேளையில், நாளை மே 6 ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெறவுள்ளது.

இங்குதான் பொதுமக்கள் ஓர் உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதாவது, அரசியல் என்பது ஒருபோதும் தவிர்க்க முடியாதது. அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொள்வது என்ற முடிவை யார் எடுத்தாலும் அது புத்திசாலித்தனமன்று.

உண்மை. ஒரு நாட்டின் இயங்கு நிலையில் அரசியலின் வகிபாகம் மிக உயர்வானது. அரசியல் இன்றி நாடு இல்லை என்று கூறுவதுதான் சாலப்பொருத்தமானது.

இங்கு அரசியலில் ஈடுபடுவதென்பதும் அரசியலைத் தீர்மானிப்பதென்பதும் ஒன்றல்ல.

அரசியலில் ஈடுபடுபவர்கள் அரசியல்வாதிகள். அரசியலை – அரசாங்கத்தைத் தீர்மானிப்பவர்கள் பொதுமக்கள்.

எனவே அரசியல் தொடர்பில் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

அப்போதுதான் அரசியலினூடு ஏமாற்ற நினைப்பவர்களை இனங்கண்டு அவர்களைத் தவிர்த்து, மக்களுக்கான மக்கள் ஆட்சியை அமைக்க முடியும்.

எனினும் நம் மக்களில் பெரும்பாலானவர்கள் அரசியல்வாதிகள் மீது கொண்ட வெறுப்பால், அரசியலை வெறுக்கின்றனர். இஃது பொருத்தமான செயற்பாடன்று.

ஏனெனில், பொருத்தமற்ற அரசியல்வாதிகளை நாம் இனங்காணத் தவறியதன் விளைவே அத்தனைக்கும் காரணமாயிற்று.

ஆக, வாக்களிக்கின்ற உரிமையை மக்கள் நூறு வீதம் பயன்படுத்த வேண்டும். அவ்வாறு பயன்படுத்துவதன் மூலமே தகைமையுடைய உள்ளூராட்சி சபைகளை உருவாக்க முடியும்.

ஆகையால் நாளை ஆறாம் திகதி நடைபெறும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்குரிமை உள்ள அனைவரும் வாக்களிக்க வேண்டும். வாக்களிக்கின்ற உரிமையை எவரும் மறுதலிக்கலாகாது.

# எமது மக்களின் நகைகளை அரசு கபளீகரம் செய்யக்கூடாது

## மக்களின் நகைகள் மக்களுக்கே – செல்வம் எம்.பி

(கொழும்பு)

எமது மக்களின் தங்க நகைகளை அரசுடைமையாக்காது உரியவர்களிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சின் வசமிருந்த தமிழ் மக்களின் பெருந்தொகையான நகைகள் தற்போது பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு மத்திய வங்கியினால் குறித்த நகைகள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், இவ் விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று ஞாயிற்றுக்கிழமை (04) வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மனிதாபிமான யுத்தம் என்ற போர்வையில் மக்களைக் கொன்று குவித்து அவர்களின் சொத்துக்களை இல்லாமல் செய்து தமிழ் மக்களை நிர்க்கதியாக்கிய பேரினவாதச் சிந்தனை கொண்ட அரசுகள் தமிழ் மக்களின் பெருந்தொகையான நகைகளை மறைத்து வைத்திருப்பது தொடர்பில் இதுவரை எவ்விதமான கருத்துகளையும் வெளியிடாமல் இருந்திருக்கின்றது.

இந்த நிலையில் நகைகளை வன்னிப் பெருநிலப் பரப்பில் உள்ள வங்கிகளில் அடகு வைத்த மக்கள் தமது நகைகளுக்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் தமது முதலீடுகள் அனைத்தையும் இழந்திருப்பதனால் பெரும் வறுமையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இவ்வாறான நிலைமையில் தற்போதைய அரசு தேர்தல் நலனுக்கானதாக இருந்தாலும் அந்த நகைகள் தொடர்பில் தகவல்களை வெளிக்கொணர்ந்து அதனை வெளிப்படுத்தியமையை வரவேற்கின்றேன்.

எனினும் குறித்த நகைகளை உரியவர்கள் இல்லை என்ற காரணங்களைக்காட்டி அரசுடைமையாக்காது நகைகளுக்கு உரித்தான தமிழ் மக்களிடம் ஒப்படைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதேவேளை பொதுமக்களும் தங்களிடம் குறித்த நகைகளை அடகு வைத்த பற்றுச்சீட்டுக்கள் இருக்கும் பட்சத்தில் அதனை வெளிப்படுத்தித் தமது நகைகளை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்கும் முன் வர வேண்டும்.

பற்றுச்சீட்டுக்கள் உள்ளவர்கள் அதன் பிரதிகளை என்னிடம் வழங்கும் பட்சத்தில் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரியவர்கள் இந்த நகைகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க முடியும்.

தவிர, அடகு வைத்த பலர் இன்று இயற்கை எய்தியும் உள்ளதால் அவை தொடர்பில் ஏதுவான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டும்.

எனவே, அவை தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு இந்த நகைகளை உரியவர்களிடம் ஒப்படைக்க வேண்டுமே தவிர நகைகளை அரசுடைமையாக்கி தமிழ் மக்களின் சொத்துக்களை கபளீகரம் செய்யக் கூடாது எனத் தெரிவித்துள்ளார். (ந-7)

# தமிழக மீனவர்களின் படகுகளை மூழ்கடிக்க இலங்கை அரசு திட்டம்

## பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் காட்டம்

(இந்தியா)

இலங்கைக் கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள இந்தியப் படகுகளில் 34 படகுகளை உடைத்து ஆழ் கடலில் மூழ்கடிக்க இலங்கை அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியளிப்பதாகப் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டு மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழிக்கும் நோக்குடன் இலங்கை அரசு செயற்படுத்தவுள்ள இந்த நடவடிக்கைக்கு அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பகுதியில் மீன்வளத்தைப் பெருக்கும் நோக்குடன் ஆழ்கடலில் செயற்கையான பவளப்பாறைகளை வளர்க்கும் நோக்கில் முதற்கட்டமாக 34 படகுகளை உடைத்து மூழ்கடிப்பதன் மூலம் பவளப்பாறைகளை எளிதாக வளர்க்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாக ராமதாஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தமிழக மீனவர்களின் படகுகளை சிதைத்து அவற்றை ஒருபோதும் கிடைக்கச் செய்யாமல் தடுப்பதன் மூலம் வாழ்வாதாரத்தை நிரந்தரமாக ஒழிப்பதே இலங்கை அரசின் இந்தத் திட்டமாகும்.

எனவே இந்த விவகாரத்தில் மத்திய அரசு தலையிட்டு தமிழக மீனவர்களின் படகுகளை அழிக்கும் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அத்துடன் இலங்கை அரசிடம் உள்ள தமிழக மீனவர்களின் படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் ராமதாஸ் கோரிக்கை விடுத்துள்ளார். (ந-7)

# ஐஸ் போதைவஸ்துடன் யுவதியொருவர் கைது

அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் மிஹிதுபுரப் பகுதியில் இருபது கிராமிற்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளுடன் யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே குறித்த சந்தேக நபர் கைது செயயப்பட்டதுடன் அவரது உடமையில் இருந்து 20 கிராமிற்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருளைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட யுவதி அநுராதபுரம் பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 24 வயதுடையவர் என்பது ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# உள்ளூர் துப்பாக்கிகளுடன் இருவர் அதிரடிக் கைது

நாடளாவிய ரீதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கலேவெலப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சியம்பலகஹவெல பிரதேசத்தில் 07 உள்நாட்டுத் துப்பாக்கிகள் மற்றும் செப்புச் சுருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் சியம்பலகஹவெல பகுதியைச் சேர்ந்த 46 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செங்கமுவ பிரதேசத்தில் உள்நாட்டுத் துப்பாக்கி மற்றும் 12 ரக துப்பாக்கிக்குப் பயன்படுத்தப்படும் 04 தோட்டாக்களுடன் மேலும் ஒரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொத்துவில் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025–12.11.2026 வரை



இதுவரை உங்கள் ராசிக்கு பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகுபகவான், 26.4. 2025 அன்று 4ஆம் இடமான சுக ஸ்தானத்திற்கு வருகிறார். குருப்பெயர்ச்சிக்குப் பிறகு குருவின் பார்வை ராகு மீது பதிவதால் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அதே நேரம் 10ஆம் இடம் எனப்படும் தொழில் ஸ்தானத்திற்கு கேது பகவான் வரப்போகிறார். எனவே தொழில் முன்னேற்றம்

யோகத்தில் உள்ளவர்கள், மேலதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவர். வெளிநாட்டு முயற்சி கைகூடும். நல்ல சந்தர்ப்பங்கள் பலவும் நாடிவரும்.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குரு சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிப்பது, பொன்னான நேரமாகும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். தன - பஞ்சமாதிபதியான குருவின் காலில் ராகு பவனி வரும் பொழுது, தன வரவிற்கு குறைவு ஏற்படாது. குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் குணம் அறிந்து நடந்துகொள்வர். வருமானம் உயரும். வாழ்க்கைத் தேவை அனைத்தும் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வும், ஊதிய உயர்வும் கிடைக்கும்.

விலகுவர். புனித பயணங்கள் அதிகரிக்கும்.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்தரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் போது, அரசு வழியில் எதிர்பார்த்த ஆதரவு கிடைக்கும். ஒரு சிலர் அதிகாரப் பதவிக்கு உயர்த்தப்படுவர். வங்கிக் கடனுதவி பெற்று தொழிலை விரிவு செய்து கொள்வீர்கள். பெற்றோரால் பெருமை சேரும். பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் சிறப்பாக முடிவடையும். துணி




தேடி வரும். ஒளிமயமான எதிர்காலத்திற்கு உத்தரவாதம் கிடைக்கும். பூர்வீகச் சொத்துக்களால் இலாபம் உண்டு. உடல் நலம் சீராகும். அரசு வழி விருதுகள் கிடைக்கலாம். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்குப் புதிய பொறுப்புகள் வந்து சேரும், புகழ் கூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன ராசிக்குப் பெயர்ச்சியாகி செல்கிறார். அப்பொழுது உங்கள் ராசிக்கு 5ஆம் இடத்திற்கு சனி வரும் பொழுது பூர்வ புண்ணிய ஸ்தானம் பலம் பெறுகிறது. இப்பொழுது அர்த்தாஷ்டம சனி விலகிவிட்டது.

## சுக ஸ்தானத்திற்கு வருகிறார் ராகு தொட்டதெல்லாம் வெற்றியாகும்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

உண்டு.

4ஆம் இடத்தில் ராகு சஞ்சரித்த சில நாட்களில் குரு பகவான், மிதுன இராசிக்குப் பெயர்ச்சியாகிறார். அங்கிருந்து அவரது பார்வையை ராகு பகவான் மீது பதிக்கிறார். எனவே அர்த்தாஷ்டம ராகுவாக இருந்தாலும் அவரால் நற்பலன்கள் கிடைக்கும். புனித பயணங்கள் அதிகரிக்கும், புகழ்மிக்கவர்களின் பட்டியலில் உங்கள் பெயரும் இடம்பெறும். மாற்று மருத்துவத்தின் மூலம் உடல்நலம் சீராகும். பாதியில் நின்ற கட்டடப்பணி மீதியும் தொடரும். பயணங்கள் பலன் தருவதாக அமையும் கொடுக்கல் வாங்கல் வளர்ச்சி பெறும். தொழிலை விரிவு செய்ய எடுத்த முயற்சி கைகூடும் குடும்ப வருமானம் உயரும்.

10ஆம் இடம் எனப்படும் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேதுவால், தொழில் முன்னேற்றம், கூடுதல் இலாபம், தனித்து இயங்கும் ஆற்றல் ஏற்படும். கூட்டாளிகளை விலக்கிவிட்டு, தானே முன்னின்று தொழிலை நடத்த முன்வருவீர்கள். சொந்தக் கட்டடத்திற்கு தொழிலை மாற்றுவீர்கள் ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். இடம், பூமி விற்பனையால் இலாபம் உண்டு. உத்தி

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11. 2025 முதல் 9. 7. 2026 வரை)**

சுய சாரத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நேர்மறை சிந்தனையை வளர்த்துக் கொள்வது நல்லது. குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல் திருப்திகரமாக இருந்தாலும், ஒரு தொகை செலவழிந்த பின்னரே அடுத்த தொகை கைகளில் புரளும்.புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் கைகூடும்.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, உடன் பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். தைரியமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். உங்களுக்கு இடையூறு செய்தவர்கள் விலகிச் செல்வர். எந்த ஒரு காரியத்தையும் நினைத்தால் நினைத்த மாத்திரத்தில் செய்து முடிப்பீர்கள். தொழில் வெற்றி நடைபோடும். போட்டிக் கடை வைத்தோர்

வும், தன்னம்பிக்கையும் கூடும். கடன் சுமை, மருத்துவச் செலவு குறையும். பிள்ளைகளால் உதிரி வருமானம் உண்டு. புதிய ஒப்பந்தங்கள் வந்த வண்ணம் இருக்கும்.

**சுக்ர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6.2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்கிர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, வாகன யோகம் உண்டு. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்குவீர்கள் தொழில் வெற்றி நடைபோடும். புதிய முதலீடுகள் செய்து வருமானத்தைப் பெருக்க முன்வருவீர்கள். பிள்ளைகளின் கல்யாண முயற்சி கைகூடும். உத்தியோகத்தில் நீங்கள் கேட்ட சலுகைகள் வழங்க மேலதிகாரிகள் முன்வருவர். வெளிநாட்டு வேலை அமையலாம். வீடு மாற்றம், விரும்பத்தக்கதாக அமையும்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது நல்ல பலன்கள் இல்லம்

கவலை மறைந்து, இன்பம் பெருகும். உற்சாகத்தோடு செயற்பட்டு உயர்ந்த நிலையை அடையப்போகிறீர்கள். தொழில் முன்னேற்றம், உத்தியோக முன்னேற்றம் ஏற்படும். நல்ல சந்தர்ப்பங்கள் வந்து சேரும். படித்து முடித்த பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து மகிழ்வீர்கள்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு- கேது பெயர்ச்சி காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. 11.5.2025 அன்று குரு பகவான், மிதுன ராசிக்கு பெயர்ச்சியாகிறார். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள் கொள்கை பிடிப்போடு செயற்படுவீர்கள். அடுத்தடுத்த நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும். குடும்பத்தில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் கேட்கும். தொழிலில் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பொருளாதார நிலை உச்சம் பெறும். ஒக்டோபர் 8ஆம் திகதி குரு பகவான், அதிசாரமாக கடக ராசிக்குப் பெயர்ச்சியாகிறார். அப்போது குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிகிறது. இக்காலத்தில் கலைத் துறையை சார்ந்தவர்களுக்கு விருதுகள் கிடைக்கும். பயணங்களால் பலன் உண்டு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை...

பணிகளுக்கு ஏதுவாகவே இவ்விடு முறை அளிக்கப்படுவதாகவும் தேர்தல் தினத்துக்கு மறுநாள் 7ஆம் திகதி புதன்கிழமை வழமைபோன்று பாட சாலைகள் இடம்பெறும் எனவும் கல்வி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7,4)

## பிரபாகரனின்...

முன்தினம் முள்ளியவளை கிழக்குப் பகுதியில் வீடுகளுக்குச் சென்று குறித்த துண்டுப்பிரசுரத்தை விநி யோகித்துள்ளார்.

இச்சம்பவம் பரபரப்பை ஏற்படுத்திய நிலையில் துண்டுப்பிரசுரங்களை பொதுமக்களிடம் இருந்து மீளப் பெற்ற பொலிஸார் வாக்குமூலங்களையும் பதிவு செய்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த வேட்பாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ந-7)

## பொதுச் செயல...

கிழமை பிற்பகல் ஹனோயில் உள்ள வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு தலைமையகத்தில் கம் யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலா ளர் டோ லாமை சந்தித்துக் கலந்துரை யாடினார்.

வியட்நாம் மற்றும் இலங்கைக்கு இடையிலான 55 ஆண்டுகால இராஜ தந்திர உறவுகளை மேலும் வலுப் படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வெளிநாட்டலு வல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத்தும் உடனிருந்தார். (ந-7,4)

## பாதுகாப்பு...

யாடல் வெற்றிகரமாக நிறைவடைந் துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின், இஸ்லாமாபாத் தில் கடந்த 28ஆம் திகதி இரு நாடு களின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி களின் பங்கேற்புடன் இந்தக் கலந்து ரையாடல் ஆரம்பமானது.

இதில் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்யகொந்தா தலைமையிலான தூதுக்குழு கலந்து கொண்டிருந்தது.

இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள பாதுகாப்பு உறவுகள் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்து வதற்குப் பயன்படுத்தக்கூடிய புதிய வழிகளை ஆராய்வதற்கான வாய்ப்பு இந்தக் கலந்துரையாடல் ஊடாக கிடைக்கப் பெற்றதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ந-7,4)

## முன்னாள்...

தொடர்பான விசாரணைகள் முடிவ டைந்துள்ளதாகப் பொலிஸ் வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் குற்றப் புலனாய்வுத்துறை ஆகியவை இந்த விசாரணைகளை மேற்கொண்டுள் ளது.

இதன்படி எதிர்வரும் நாட்களில் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

குருநாகல், கண்டி, பதுளை மற்றும் மொனராகலை மாவட்டங்களைச் சேர்ந்த ஐந்து முன்னாள் அமைச்சர் கள் மற்றும் களுத்துறை மாவட்டத் தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தற் போதைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் எதிராகவே சட்டநடவ டிக்கை எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவர்கள் விரைவில் கைது செய்யப் படுவார்கள் என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7,4)

## மாகாண சபைத்...

கருத்துத் தெரிவித்த அவர்,

எல்லை நிர்ணயம் மேற்கொள்ளப் படாமையினால் மாகாண சபைத் தேர் தலை நடத்துவதில் சட்டச் சிக்கல் காணப்படுகிறது.

பழைய முறையிலாவது மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என, தேர்தல்கள் ஆணைக்குழு வினால் அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, பாராளுமன்றத்தில் இது தொடர்பான சட்டம் நிறைவேற்றப்படு மாயின், எந்த நேரத்திலும் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந-7)

## பயங்கரவாதத்...

போராடியவர்கள் நாங்கள். எனவே, அந்தச் சட்டத்தை நிச்சயம் நீக்கு வோம். ஐரோப்பிய ஒன்றியக்குழுவிட மும் இது தொடர்பில் எடுத்துரைக்கப் பட்டுள்ளது."

எமது நீண்ட கால எதிர்பார்ப்புக ளும், ஐரோப்பிய ஒன்றியம் முன்வைக் கும் கருத்துக்களும் சமாந்தரமுடை யவையாக உள்ளன என நான், ஐரோப் பிய ஒன்றியத்தின் தூதுக்குழுவிடம் சுட்டிக்காட்டினேன்.

1979இல் பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவந்தபோது அதற்கு எதிராகக் கறுப்புக்கொடி பறக்கவிட்டு, சிறைக்குச் சென்றவர்கள் எமது உறுப் பினர்கள். அதேபோல் 1988 மற்றும் 1989காலப்பகுதியில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தால் நாமே கடுமை யாகப் பாதிக்கப்பட்டோம். பயங்கர வாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண் டும் என்பதற் காகப் போராட் டங்களை நடத்தி னோம். எனவே, பயங்கரவாதத் தடைச் சட்டம் நிச்சயம் நீக்கப் படும். சட்ட மொன்றை இரத் துச் செய்யும் போது, சட்டத் தில் வெற்றிடம் இருக்கக்கூடாது. அவ் வாறான வெற்றிடத்துக்கு இடமளிக்காது, சட்டத்தை ஈடு செய்யக் கூடிய வகையில் புதிய சட்டம் அவசியம்.

எனவே, பயங் கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வும், புதிய சட்டத் தைக் கொண்டு வரவும் குழு வொன்றை நிய மித்துள்ளோம்." என்றார். (ந-7,4)

## காங்...

ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

யாழ்ப்பாணத் தில் உள்ள ஜனா திபதிமாளிகையை வாடகைக்கு எடுப் பதில் கனேடிய முதலீட்டாளர்கள் உட்பட ஐந்து வெளிநாட்டு முத லீட்டாளர்கள் ஆர் வம் காட்டுகின்ற னர்.

அத் தோடு, யாழ்ப்பாணப் பல் கலைக்கழகமும் மற்றும் ஒரு தனி யார் தொழில் நுட் பக் கல்வி நிறு வனமும் யாழ்ப் பாணத்தில் உள்ள ஜனாதிபதி மாளி கையை வாட கைக்கு கோரி யுள்ளனர்.

எனினும் யாழ்.பல்கலைக் கழகத் திற்கு அந்த இடத்தில் செயற்பட ஏற்ற சூழல் இல்லை எனக் கண்டறி யப்பட்டுள்ளது.

எனவே குறித்த ஜனாதிபதி மாளி கையை சுற்றுலாத் துறையை மேம் படுத்துவதற்காக வழங்குவதற்கு அர சாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

இந்த நிலையில், ஜனாதிபதி மாளிகை கள் தொடர்பான விடயங்களை ஆராய ஏற்கெனவே ஒரு குழு நியமிக் கப்பட்டுள்ளதாகவும் அந்தக் குழு வின் முடிவுகளின் அடிப்படையில் ஒரு மாதத்திற்குள் இது தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அமைச்சர் அநுர கருணாதிலக மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த காங்கேசன் துறை ஜனாதிபதி மாளிகை தமிழர் களின் பூர்வீக இடம் எனவும் இங்கு சடையம்மா மடம், ஆதிசிவன் கோயில் உள்ளிட்ட சைவர்களின் புராதன ஸ்தலங்கள் உள்ளன என்றும் எனவே அவற்றை விடுவிக்க வேண்டும் என அகில இலங்கை இந்துமா மன்றம் தொடர்ச்சியாகக் கோரி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2025.05.04 — சீட்டிழுப்பு இலக்கம் 5821 — E 1 8 4 2 4 3
அத சம்பத — E 4 2 4 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0396
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய — திகதி - 2025.05.04 — சீட்டிழுப்பு இலக்கம் - 1851 — J 12 41 64 81 J — Double Chance 47995

மெகா பவர் — திகதி 04/05/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2169 — V 18 14 17 58 62

ஜய — திகதி 2025.05.04 — சீட்டிழுப்பு இலக்கம் 089 — B 5 2 4 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4063 — சீட்டிழுப்பு திகதி 04.05.2025 — X 10 35 39 78 — X
தேசிய லொத்தர் சபை

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.05.04 — சீட்டிழுப்பு இலக்கம் 1130 — கடகம் 05 07 09 17 கடகம் — 89185 — 17

உத்தியோகபூர்வ முடிவுகள் — 04.05.2025 — வெற்றி வாரம் 529 — R — 9 5 3 5 0 8 — 77138 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36,651,774.40 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2795 — சீட்டிழுப்பு திகதி 2025.05.04 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 09 25 72 77 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,031,640.00 — DLB

சனிதா — திகதி 04.05.2025 — வெற்றி வாரம் 4956 — 32 37 46 76 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 62,598,532.00 — ரூ.100,000/- 74783 — DLB

சசிரி — 676 — 04.05.2025 — ஞாயிற்றுக்கிழமை — 14 28 50 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4507 — சீட்டிழுப்பு திகதி 04.05.2025 — தினம் ஞாயிற்றுக்கிழமை — 11 34 49 60 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,813,634.00 — 163748 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — Z 29 37 38 54 71 — 1971 — 04.05.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் — DLB

அத கோடிபதி ADA KOTIPATHI — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2621 — சீட்டிழுப்பு திகதி 2025.05.04 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,961,254.40 — 11 36 38 52 X — 666317 — DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து)

**பாண் போறணை வாஸ் பதவிக்கு விண்ணப்பம் கோரல்**

அராலி மேற்கு, வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள எமது வெதுப்பகத்திற்கு வெதுப்பக போறணைவாஸ் தேவையாக உள்ளது. தகுதியானவர்கள் தலைமைக்காரியாலய நேரத்தில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

முடிவுத் திகதி :- 31.05.2025 நண்பகல் 12.00மணி வரை

தலைவர்
சங்கானை. ப. நோ.கூ.சங்கம்
(தொ.பே.இலக்கம் 021 225 0126)

(C-2892)

## உடனடி வேலைவாய்ப்பு

அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திற்கு உத்தியோகத்தர்கள் தேவை. (A/L படித்தவர்கள் விரும்பத்தக்கது) 5 நபர்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

**077 408 8241**

(1103)

## மணமகன் தேவை

2001(23 வயது). london(uk) இல் வசிக்கும் uk citizen பெண்ணுக்கு உள்ளூர்/ வெளியூர் மணமகன் தேவை
பதிவிலக்கம் 18646
தொடர்புகளுக்கு :

**070 202 2679**

(1103)

## தேவை

- சாரதி
  வயது 25 இற்கு மேல்
- விற்பனை உதவியாளர்

தொடர்புகளுக்கு :

**076 440 0816**

(1102)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2893)

## அறிவித்தல்

**076 XXX X523**

மேற்படி தொடர்பு இலக்கம் எமது சேவையில் இருந்து நிறுத்தப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் பொதுமக்கள் மேற்படி தொடர்பிலக்கத்துடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்கவும்

**ஈ – சன்ஸ்**

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613

(C-2895)

## ஆகாஸ் நகை மாடம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2894)

**076 825 7716** (ஆகாஸ்)

## SMART VISA AND TRAVELS

அனைத்து நாடுகளுக்குமான அனைத்து விதமான வீசாக்களையும் விண்ணப்பங்களையும் SMART VISA AND TRAVELS ஊடாக விண்ணப்பிக்கலாம்.

Tel: 076 008 8098, 021 229 1599
No.375, Clock Tower Lane,
Jaffna Town.

(1096)

## வேலையாட்கள் தேவை

மானிப்பாயில் உள்ள பிரபல்ய புடவையகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை. பெண்கள் மட்டும்.
சம்பளம் : 20,000 - 30,000 வரை
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**076 414 8327**

(4095)

## புகையிலை விற்பனைக்கு

அச்செழுவில் 2000 கன்று தரையில் நிற்கும் வெள்ளை புகையிலை (வடமராட்சி) விற்பனைக்கு உண்டு.

**077 689 4344**

(4106)

## முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 2024.04.18 அன்று அமரத்துவம் அடைந்த
எமது அன்புத் தெய்வம்

### அமரர் நாகராசா சாம்பசிவம்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் நாளை 2025.05.06 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் கிரியைகள் நடைபெற உள்ளதால், தாங்களும் வருகைதந்து எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்குகொண்டு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2ம் வட்டாரம், கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

குடும்பத்தினர்
077 273 3861

(C-2888)

## விசேட சலுகைகள்

வெளிநாடுகளுக்கான 11Kg ற்கு மேற்பட்ட பொதிகளுக்கான 1Kg க்கான கட்டணம்

UK - 1380/=
Australia - 2130/=
France - 1930/=
Germany - 1880/=

மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்

**திருமுருகன் பொதிகள் சேவை**
321,K.K.S Road, Jaffna
077 755 4528

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி

(1101)

## வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு

076 636 3378 | 076 097 3127

## XMARD வேலைவாய்ப்பு

### XMARD SUPERMARKET

(Everywhere for you)

எமது சுப்பர்மார்க்கெட்டின் கிளைகளுக்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

1. முகாமையாளர் **Manager** (ஆண்/பெண்)
2. காசாளர் **Cashier** (ஆண்/ பெண்)
3. களஞ்சியப் பொறுப்பாளர் **Storekeeper** (ஆண்)



யாழ்.மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தின் எப் பகுதியிலும் பணியாற்றக் கூடியவர்கள் விரும்பத்தக்கது.

சுயவிபரக்கோவையினை xmardnetwork@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது 074 1011 345 எனும் வாட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பவும்.

(C-2891)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.